# பக்தி விஜயம்..



ஆடி - ஆவணி 2012

ரதம் : 01

வழி : 03

இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்



குருப்பெயர்ச்சியின் எதிரொலி !

கல்லும் கசியும் மீராவின் பக்தி !

ஆடி மாத சிறப்புகள் !

அனுமனின் மைந்தன் ?

மாணவர் சமய அறிவுப்போட்டி ..

நலம் தரும் யோகா ..

'ஹிந்து' எப்படி உருவானது ?

உலகில் பெரியது என்ன?

விரத சமையல்..

100/=

மன்னாரில் இருந்து வெளிவரும் ஆன்மீக இதழ்


ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்
வட்டக்கச்சி - கிளிநொச்சி.
ஸ்ரீ ஓம் நமோ நாராயணாய



# ஆரம்பமாகப்போகிறது ..
# அழகு நல்லூர் மகோற்சவம்!

எழில்மிகு கந்தனின் திருக்கோலம் காணவென காத்திருந்த மாதமாம், ஆடியும் வந்துவிட்டது ..

இனியென்ன.. சைவம் சாமரம் வீச, தமிழானது பூத்தூவ சுற்றுவட்ட முழு யாழ்ப்பாணமும் கந்தனைக் கொண்டாடத் தயாராகிவிடும். சுற்றாடலில் கோயில் கொண்டருள்கின்ற பெருந்தெய்வங்களாம் கைலாசப் பிள்ளையாரும், கைலாய நாதரும், சட்டநாதராகிய சிவனும், வீரமாகாளியம்மனும் நல்லூர் குமரனின் பக்த நெரிசலில் இன்பத் திக்குமுக்காடுவர்.

நல்லூருக்கென்றே அமைந்த நேரந்தப்பாத பூஜைகளுக்கு, சகல வீதிகளும் அகலத்திறந்து அடியார்களை அளவில்லாமல் அனுப்பிக்கொண்டேயிருக்கும். அணில்களின் கீச்சுக் கதைகளும், மரநிழல்களில் சாவகாசமாக அமர்ந்து கதைக்கும் நாளாந்த பகதர்களின் ஊர்ப்பேச்சுக்களும் கொஞ்ச நாளைக்கு காதில் விழாது.

திருக்கோயிலின் தெற்குவாசலில் பொருத்தப்பட்டுள்ள பெருங்கோபுரம், இவ்வருட உற்சவத்திற்கு மேலுமொரு அழகூட்டும்! இந்தியச்சிற்பங்களும் இக்கோபுரத்தில் இடம்கேட்டு விண்ணப்பிக்கும் அளவுக்கு விண்முட்டும் எழிலதிசயம் இது.

நீளமான பட்டியல் கொண்ட விஞ்ஞாபனத்தின்படி இருபத்தைந்து நாட்களையும் கடந்து, பயணிக்கப்போகின்ற திருவிழாக்களில் அபிஷேகங்களும், தீப, தூப, புஷ்பார்ச்சனைகளும் பக்தி இன்பத்தை அள்ளிக்கொட்டும். பதிலுக்கு பதிகமும், பண்ணிசையும், மங்கல இசையுடன் போட்டியிட்டு இனிய தமிழ்ச் சுவைகூட்டும். ஆலத்திகளில் பரவசமாய் “அரோகரா ..!” ஒலியெழுப்பிய பக்திக் களையாறி, கந்தனின் பக்தர்கள் வீடேகும் காட்சியில் தெரிகின்ற இன்பமே தனி!

இந்த நாட்களில் ..

நாளொரு அலங்காரத்தில், வண்ணமயமாக தரிசனம் தந்து, வீதியுலா வரும் நல்லூர் கந்தனுக்கும், கண்டு மகிழ்ந்து தேர், தீர்த்தம் வரை உற்சவத்தை நடத்திச்செல்லும் அடியார்களுக்கும் ஓய்வென்பதே இருக்காது ..







# நாயன்மார் வாழ்வில்

## பக்தி நெகிழ்வூட்டும் நாயர்மார்களின் மெய்சிலிர்க்க வைக்கும் தொடர் அடுத்த இதழிலிருந்து......

**..சி**ல மாதங்களாக அந்த ஊரில் போதிய மழை இல்லை. நெல் விளைச்சல் அடியோடு பாதிப்படைந்தது. கஷ்டம் தலைதூக்கியது. தனது வியாபாரம் வீழ்ந்தது பற்றிக்கூட கவலைப்படாமல், 'சுந்தரரின் குடும்பத்திற்கு எவ்வாறு நெல் அனுப்புவது ..' என்று கவலைப்படலானார் குண்டையூர் கிழார்.

ஒருநாள் அவரின் கனவில் சிவபெருமான் தோன்றினார். ''வருந்தாதே, இப்போதே நான் குபேரனை உன்னிடம் அனுப்புகிறேன். வேண்டிய நெல்மணிகளைப் பெற்றுக்கொள்!'' என்று கூறி மறைந்தார்.

திடுக்கிட்டு எழுந்த கிழாரின் முன்னால் நெல் மூட்டைகள் மலைபோல் குவிந்திருந்தன. சந்தோஷம் தாங்காமல் இச்செய்தியை சுந்தரரிடம் கூறுவதற்கு திருவாரூருக்குப் புறப்பட்டார்.

சுந்தரரின் கனவில் ''உன்னைக் காண்பதற்கு எம் அடியான் குண்டையூர் கிழான் வந்துகொண்டிருக்கிறான். சென்று வரவேற்று அழைத்து வா ..'' என்று பெருமான் கட்டளை தந்தார்.

இடைவழியில் சந்தித்துக்கொண்ட இருவரும் குண்டையூர் சென்றார்கள். நெல் மணிகளைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்தார் சுந்தரர். அந்த அளவுக்கு அவை மலைபோல் இருந்தன.

''எல்லாம் உமக்கென்றே ஈசன் கொடுத்தது. எடுத்துச்செல்லும்'' என்றார். தான் எவ்வளவு துன்பம் அடைந்தாலும், பிறர் துன்பத்தை போக்குவதில் அவருக்கு எத்தனை மகிழ்ச்சி!

இத்தனை நெல்மணிகளையும் எப்படிக் கொண்டு சேர்ப்பது என்றெண்ணித் திகைத்த சுந்தரர் தாயுமானவரை வேண்டினார். பெருமானும் தோன்றி, '' கவலைப்படாதே, என் பூத கணங்கள் இவைகளை உன் வீட்டில் சேர்த்துவிடும்'' என்றார். அதுபோலவே சுந்தரர் ஊர் வந்து சேர்வதற்குள்ளேயே, அவர் வீட்டில் நெல் மூட்டைகள் குவிந்து, வீட்டையே மறைத்து விட்டன....







# பக்தித் துளிகள் ..



ஒரு சமயம் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமாள் நாயனாரும் சிவனாரைத் தரிசிக்க கைலாயம் செல்லும் வழியில் ஔவையாரையும் அழைத்துச்செல்ல விரும்பினார்கள். அப்போது ஔவையார் பிள்ளை யாருக்குப் பூஜை செய்து கொண்டிருந்தார். காத்திருந்த இருவரும் ஔவையை அவசரப்படுத்தினார்கள். தினமும் விக்னேஸ்வர பூஜையை தவறாமல் செய்பவராகையால் 'நீங்கள் செல்லுங்கள், பூஜையை முடிக்காமல் நான் வருவதற்கில்லை' என்று கூறிவிட்டார். பக்தி சிரத்தை யோடு வழிபட்டு முடித்ததும், பிள்ளையார் அவர்முன் தோன்றினார். தனது துதிக்கையால் ஔவையாரை அப்படியே தூக்கியெடுத்துக் கொண்டுபோய் கைலாசத் தில் சேர்த்துவிட்டார். ஔவையார் தரிசித்த பிறகே சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமாளும் கைலாசத்தை வந்தடைந்தனர். ஔவையின் கணபதி நம்பிக்கையை எண்ணி வியந்தனர்.



ஒருமுறை பார்வதி தேவிக்கு ஒரு சந்தேகம் வந்தது. ''புனித தீர்த்தங்களில் குளிப்பதால் பாவம் விலகும் என்று கூறு கிறார்களே! அது நம்பிக்கையா, அல்லது பக்தியா? ..'' என்று மகேஸ்வரனிடம் கேட்டாள்.

இந்தக் கேள்விக்கான பதிலை அனுபவத்தின் மூலம் அளிக்க விரும்பினார் ஈசன். உமையை அழைத்துக்கொண்டு, நேராக பூலோகத்திற்கு வந்து கங்கைக்கரையில் இறங்கினார். வயோதிபர்களாக இருவரும் உருவத்தை மாற்றிக்கொண்டார்கள். தாகத்தால் தவித்த நிலையில் இறைவன் பார்வதியின் மடியில் படுத்துக்கொள்ள, ''யாராவது என் கணவருக்குத் தண்ணீர் தாருங்களேன்! '' என்று அங்கே நடமாடியவர்களை நோக்கிக் கெஞ்சினாள் பார்வதி. நீர் கொண்டுவந்தவர்களிடம் ஒரு நிபந்தனையும் போட்டார். ''பாவம் செய்யாதவர்கள்தான் நீர் தரவேண்டும்..'' என்றார்.



வந்தவர்கள் மௌனமாகத் திரும்பினார்கள். அப்போது ஒரு திருடன் வந்தான். சற்றும் தயங்காமல் அருகே ஓடிய கங்கையில் பாய்ந்து மூழ்கி எழுந்து விட்டுவந்து தண்ணீரை பெரியவரிடம் கொடுத்தான். ''நீ பாவம் செய்யவில்லையா? ''என்று பார்வதி கேட்டதற்கு --'' நான் பாவிதான் .. ஆனால், இந்த தீர்த்தத்தில் நீராடி வந்ததால் புனிதனாகிவிட்டேன். இவருக்கு நீர் தந்த பிறகு, நான் மீண்டும் செய்யப்போவதுதான் பாவம் ..''

பக்தியின் அத்திவாரம் நம்பிக்கை என்பதை எம்பிரான் உணர்த்திய விதத்தை எண்ணி மகிழ்ந்தாள் பார்வதி.

ஒருநாள் துறவி ஒருவர் சிவபூஜை செய்துகொண்டிருந்தார். சிவபெருமான்மீது பெரிதும் பக்தி உள்ளவர் அவர். அப்போது தாகத்தில் அலைந்து திரிந்த ஒரு நாய் அவ்விடத்திற்கு வந்தது. இதைக்கண்ட சுவாமிகள் அபிஷேக நீர்ப் பாத்திரத்தை நாயின் முன்னால் வைத்தார். உடனே அபிஷேக நீரைக் குடித்துவிட்டு, நாய் அங்கிருந்து அகன்றது.

இதை அவதானித்த பக்தர் ஒருவர் பதட்டமடைந்து, ''சிவ நிந்தனை செய்துவிட்டீர்களே '' என்றார்.

''இல்லை, பெருமானுக்குறிய நீர் அது. அவரே நாய் வடிவத்தில் வந்திருந்தால் ? ..'' என்று அமைதியுடன் கூறினார் துறவி.

எல்லா உயிர்களிலும் ஈசனின் உறைவிடம் இருப்பதை உணர்ந்தார், கேட்டவர்.

# பக்தி விஜயம்



இந்து சமூகத்தின்
ஆன்மீக எழுத்துப்பணியில் ..

இதழ் உருவாக்கம்,
கணனி வடிவமைப்பு,
நிர்வாக இயக்கம்:
**எஸ்.பி. முத்து**

அனுசரணை:
**வை. திருச்செல்வம்**

இந்த பக்திச் சஞ்சிகை
வெளிவரும் முகவரி:
**555, புதுத்தெரு,**
**மன்னார்,**
**இலங்கை.**
தொலை பேசி:
**071- 3861168**
**023- 2250071**
**077- 4335144**

சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன. அவற்றுக்கு நன்றிகள். வாசகர்களும் சமய செய்திகள், ஆக்கங்கள் தருவதோடு கருத்துக்களையும் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

## சமயமும், வாசிப்பும் ..

அன்பர்களுக்கு தாழ்மையான வணக்கம்!

'பக்தி விஜயம் ..' தனது மூன்றாவது மாத இதழை நிறைவு செய்து, தங்களின் கரங்களில் தந்துள்ளது. ஆர்வத்தோடு தொடர்ந்து வாசித்து வருகின்ற வாசகர்கள் என்றும் நன்றிக்குறிவர்கள்.

இரண்டு நோக்கங்களுக்காக இந்த மாதாந்த சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது.

**முதலாவது, சமய இன்பத்தை ஊட்டுவது.**

சமய பாடங்கள் பாடசாலைகளிலும், சமய நிகழ்ச்சிகள் ஆலயங்களிலும் குறைவில்லாமல் நடக்கின்றன. ஆயினும், நம் சைவத்தில் புதைந்து கிடக்கின்ற பொக்கிஷங்களோ இன்னும் நிறைய! நம் மக்களுக்கு அவை தூரத்து உறவாகவே இருக்கின்றன. அவற்றைத்தேடி, சுவைக்கத்தரும்போது சமய ஆர்வத்துடன், கூடவே சமயஅறிவும் நிலை கொள்ளும். எனவே, இந்த சிறிய வெற்றிடத்தை நிரப்ப விரும்பினோம்..

**இரண்டாவது காரணம் ..,**

'வாசிப்பு ஆர்வம் நம் மக்களிடம் இல்லை..' என்ற கருத்து எப்போதுமே ஒரு தவறைச் செய்துகொண்டிருக்கிறது. நம்புலத்து மக்களின் இலக்கிய அறிவையும், புலமையையும் ஓரங்கட்டிவிடும் அபாயம் இந்தக் கருத்தினுள் புதைந்திருப்பதை ஏனோ அலட்சியப்படுத்துகிறார்கள். அல்லது புரிந்தும் இப்படிச் சொல்கிறார்கள்.

எஞ்சியிருக்கின்ற வாசிப்பு ஆர்வத்தையும் ஊனப்படுத்தி, நம் வாசிப்புத்துறையை நிரந்தரமாக கிடப்பில் போட்டுவிடுகின்ற பொறுப்பற்ற கருத்து இது.

'குறைவு' என்ற பதத்தை வேண்டுமானால் உபயோகிக்கலாம். அது நிறைவு என்ற தேவையை ஞாபகப்படுத்துகின்ற நற்சேவையைக் குறிக்கும்.

வாசிப்பு ஆர்வத்தை நம் சமூகத்தில் முன்னேற்ற எதிர்காலத்தில் எத்தனையோ யுக்திகள் வரத்தான் போகின்றன என்று ஆசையோடு நம்புகிறோம். அதுவரையில் இருக்கின்ற ஆர்வத்தை முடிந்தவரை தக்கவைக்க முயல்கிறோம் ..

இது தவறா?







# இம்மாதத்திலே ..

## நலம் தரும் நாட்களும், விரதங்களும் ..

01 - 07 - 2012 , ஞாயிற்றுக்கிழமை
பிரதோஷ விரதம்

03 - 07 - 2012 , செவ்வாய்க்கிழமை
பூரணை விரதம்

07 - 07 - 2012 , சனிக்கிழமை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

11 - 07 - 2012 , புதன்கிழமை
அட்டமி - நவமி

14 - 07 - 2012 , சனிக்கிழமை
ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம்

16 - 07 - 2012 , திங்கட்கிழமை
ஆடிப்பிறப்பு, பிரதோஷ விரதம்

17 - 07 - 2012 , செவ்வாய்க்கிழமை
முதலாம் ஆடிச்செவ்வாய்

18 - 07 - 2012 , புதன்கிழமை
ஆடி அமாவாசை விரதம்



22 - 07 - 2012 , ஞாயிற்றுக்கிழமை
நாக சதுர்த்தி விரதம்

23 - 07 - 2012 , திங்கட்கிழமை
ஆடிப்பூரம், கருட பஞ்சமி

24 - 07 - 2012 , செவ்வாய்க்கிழமை
ஷஷ்டி விரதம், நல்லூர் கந்தசுவாமி
கோயில் கொடியேற்றம்

26 - 07 - 2012 , வியாழக்கிழமை
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை
அட்டமி - நவமி

27 - 07 - 2012 , வெள்ளிக்கிழமை
வரலட்சுமி விரதம்

29 - 07 2012 , ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி விரதம்

30 - 07 - 2012 , திங்கட்கிழமை
பிரதோஷ விரதம்

31 - 07 - 2012 , செவ்வாய்க்கிழமை
மூன்றாம் ஆடிச்செவ்வாய்



# தெய்வீகப் பிரசங்கம்

இந்த மாதம் தருகின்றவர்,
**ஷண். ரவிசந்திர குருக்கள்**



## தருவருட் பிரசாதம் ..!

வில்வம், பூக்கள், குங்குமம், தீர்த்தம், ப்ரசாதம் என்பதும், இறைவனுக்குச் சாற்றிய பஞ்சாமிர்தம், அபிஷேகம் செய்யப்பட்ட புனித நீர், விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவையும், இறைவனுக்குப் படைக்கப்பட்டு நமக்கு வழங்கப்படும் பொங்கல், பலகார வகைகள் யாவும் **திருவருட் பிரசாதம்** என்று உயர்வாகக் கூறப்படும். சாதாரணமாக நாம் வீட்டில் அரசி, மறக்கறியை அடுப்பிலே வைத்து உரிய பக்குவத்துடன் சமைத்து உண்கின்றோம். இதையே ஆலயத்திற்குக் கொண்டுசென்று அமுது தயாரிக்கும்போது அங்கே கிடைக்கும் நீரைத்தான் பயன்படுத்த வேண்டும். அங்கே கிணற்று நீர் சிலவேளை உவர்ப்பாகவோ, கசப்பாகவோ இருக்கலாம். அதில் பிரசாதங்களை தயாரித்தும், இறைவன் முன்பாக பொங்கலிட்டும், நாம் வழிபாட்டை நிறைவேற்றுகிறோம். பூசை முடிந்ததும் பிரசாதமாகத் தரப்படும் அவற்றை ஏற்று உண்ணும்போது வித்தியாசம் தெரிகிறது. வீட்டிலும், ஆலயத்திலும் ஒரே பொருளை, ஒரே மாதிரியாகச் செய்தாலும் சுவையானது வேறுபடுகிறது இல்லையா, இது ஏன்?

அதுவே நமக்கும், தெய்வத்திற்கும் உள்ள வித்தியாசம். வீட்டில் செய்வதைப்போலவே, ஆலயத்திலும் செய்தாலும் அங்கே தெய்வப் பிரசன்னம் நேரடியாக உண்டு. தெய்வச் செயலுக்கு உட்பட்டுத் **திருவருட் சக்தி** பெற்றுவிடுகிறது. இதனால் சுவையில் மாற்றம் கொண்டு நம் உடலுக்குக் கிடைக்கிறது. உணவில் மட்டுமின்றி, நம் அனைத்துக் கருமங்களுமே அங்கே **திருவருட் சக்திக்கு** உட்படுகின்றதால் உடல், மனம், எண்ணம் யாவுமே மாற்றத்தை உணர்ந்து புனிதமாகிறது. அதனால்தான் மாற்றமானது எப்போதும் ஆலயத்திலிருந்து நம்முடன் வெளியே வருகிறது.
நாம்தான் கண்டுகொள்வதில்லை ..

பணிவான நன்றி :
**ஷண். ரவிசந்திர குருக்கள்**
**(பிரதம குருவும், சோதிடரும்)**
**அம்மன் வீதி,திருநெல்வேலி,யாழ்ப்பாணம்**





### வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப்பெருமாள் கோயிலில் வரலட்சுமி பூஜை

வருடந்தோறும் தனிப்பெரும் சிறப்புடன் இவ்வாலயத்தில் நடைபெற்று வருகின்ற வரலட்சுமி விரத பூஜை , இம்முறையும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. கிருஷ்ண பரமாத்மாவின் பூரண அருட்கடாட்ஷம் கிடைக்கின்ற இங்கே நடந்து வருகின்ற வரலட்சுமி பூஜை சொல்லொணா மனநிறைவு தருவதாகும். பெருமளவு பக்தர்கள் திரள்கின்ற இந்த வருடாந்த நிகழ்வு ஆடி பன்னிரண்டாம் திகதி **(27.07.2012)** வெள்ளிக்கிழமை பிற்பகல் **2.00** மணிக்கு பக்தி பூர்வமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

### முழங்காவில் பிள்ளையார் கோவில் மகோற்சவம்!



வன்னி முழங்காவிலில் தலங்கொண்டு அருள் பாலித்து வரும் விநாயகப் பெருமானின் ஆலய மகோற்சவம் **26.06.2012** அன்று பக்தி பூர்வமாக ஆரம்பமானது. புதிய நிர்மாணப் பொழிவுடன எள்ளுக்காப்பு, சாந்தி பூஜைகளுடன் தொடக்கப்பட்டு **29.06.2012** அன்று மகா கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டது. விஷேட அபிஷேக, பூஜைகளோடு கலை நிகழ்ச்சிகளும் ததும்ப,தொடந்தும் பன்னிரண்டு நாட்கள் திருவிழா இடம்பெறுவதும் சிறப்பு.

# தெய்வீக சந்தேகங்கள் ..

***பிள்ளையார் திருவுருவங்கள் சில இடங்களில் வேறுபட்டிருக்கின்றன. சில விநாயகரின் துதிக்கையில் கலசமும், சில விநாயகரின் துதிக்கையில் பழமும் காணப்படுகின்றன. இது ஏன்?***

பதினாறு விதமான கணபதிகள் இருப்பதாக அறிய முடிகிறது. இதில் மகா கணபதியின் துதிக்கையில் கலசம் இருக்கும். பால கணபதியின் துதிக்கையில் விளாம்பழம் இருக்கும். எல்லா விநாயகருமே அருள் மழை பொழிபவர்கள்தான் ..





***விஞ்ஞானம் மேலோங்கிவிட்டது, பகுத்தறிவு விரிவடைந்துவிட்டது, என்றெல்லாம் கூறி தெய்வ நம்பிக்கையை குற்றம் சொல்கிறார்களே!***

விஞ்ஞானமும், பகுத்தறிவும் மனிதனின் துன்பங்களைத் தீர்க்கவில்லையே. கஷ்டங்களும், நோய்களும் புதிது புதிதாக தோன்றிக்கொண்டுதானே இருக்கின்றன. எந்த இடத்திலேனும் நிம்மதி இருக்கின்றதா? மறுபக்கம் மரணம் என்ற ஒன்றும் இருக்கிறது. நாளை என்ன நடக்கும் என்ற கலக்கமும், பயமும் நம்மிடையே இல்லையா? இவற்றை எந்த விஞ்ஞானத்தால் தீர்க்க முடியும்? மன அமைதியே தேவை. அதற்கு ஆன்மீகமே ஒரே வழி!

***மறைந்துபோனவர்களுக்கு நடக்கும் அனுதாப நிகழ்வுகளில் 'இவரின் ஆத்மா சாந்தி அடையட்டும்' என்று கூறுகிறார்களே!***

'ஆன்மா சாந்தி அடையட்டும்' என்ற வாக்கியம், ***may his soul rest in peace*** என்ற ஆங்கில வசனத்தின் மொழிபெயர்ப்புதான். மேல்நாட்டு பாணியான இந்த அனுதாப அறிவிப்பு, நம்மிடையே வந்துவிட்டது. ஆனால், உண்மையிலேயே ஆன்மா என்பது எப்போதுமே சாந்தியில் இருப்பதுதான். நாம்தான் அதனை அனுபவிப்பதில்லை.





**சில கோயில்களில் தரிசனத்திற்காக உள்ளே செல்லும் ஆண்களுக்கு சட்டையை கழற்றுமாறு கூறப்படுகிறதே! ஏன்?**

ஒரு காலத்தில் சட்டை என்பது டாம்பீகம், அல்லது படாடோபத்திற்கு அடையாளமாக விளங்கியது. இறைவனுக்கு பணியும் வண்ணம் சந்நிதானங்களில் அவை தவிர்க்கப்பட்டன. மரியாதை தரும் வண்ணம் செருப்புகளை கழற்றுவதைப்போல சட்டையையும் கழற்றுவது வழக்கத்தில் இருக்கிறது.



**'ஹிந்து' என்ற சொல் எப்படி உருவானது?**

இது உருவானது அல்ல. ஒரு வாழ்க்கையின் பெயராக இது விளங்குகிறது. பாரசீகர்கள் இந்தியா வந்தபோது, சிந்து நதிக்கரையில் வாழ்ந்தவர்களை 'ஸிந்துக்கள்' என்றார்கள். பிறகு கிரேக்கர்கள் வந்தபோது, 'ஸி' உச்சரிப்பை 'ஹி' ஆக்கி 'ஹிந்துக்கள்' என்றார்கள். பின்னர் வந்த மேனாட்டுக்காரர்களும் இதையே பின்பற்றி, 'ஹிந்துக்கள்' என்றும், 'ஹிந்து மதம்' என்றும் குறிப்பிட்டார்கள்.

வேற்று மதங்கள் வரும்வரை ஹிந்துக்கள் தங்கள் மதத்தை ஒரு வாழ்வு முறையாகவே கருதினார்கள். அமைதி, ஆன்மீகம், தர்ம நெறிகள் யாவும் அதில் அடங்கியிருந்தன. பின்னால் வந்த மதங்களின் இடையில் 'ஹிந்து' என்பதும் ஒரு மத அடையாளமாகி விட்டது. ஆனால் இதனை மதம் என்று தனிப்பெயர் கொடுக்கவில்லை. யாரும் உருவாக்கவும் இல்லை.

**கடவுளை வணங்க கோயிலுக்கு காலையில் செல்வது நல்லதா, அல்லது மாலையில் செல்வது நல்லதா?**

இரண்டு வேளைகளிலும் மனம் எப்போது அமைதியாக இருக்கிறதோ, அப்போது செல்வதே நல்லது.





# அனுமனுக்கு மகனா ..!?

## நம் புராணங்களில் வியப்பூட்டும் பாத்திரங்கள்!

# மச்சவல்லபன்

**'அனுமனுக்கு மகன் இருக்கமுடியுமா!' என்று அனேக வாசகர்கள் குழம்பி விட்டார்கள். இல: 01 சமய அறிவுப் போட்டியில் இக் கேள்வி இருந்ததே காரணம். 'தமது தூய இஷ்ட தெய்வத்தின் பிரமச்சரிய மேன்மைக்குப் பங்கமா!..' என்று இந்த பக்தர்கள் வெகுண்டது நியாயமானதே. ஆயினும் புராணங்களின் வேர்வரை பயணித்தால், அவைகளில் வரும் அறிய தகவல்கள் அசர வைக்கும். தூய்மையான ராமபக்த அனுமனின் வியர்வைத் துளியொன்றால் உருவெடுத்த வீரனொருவன், தனது தந்தை அனுமார் என்று கூறிப் பெருமைப்படுவதாக காவியப்பகுதிகளில் வருகின்றன. மற்றும்படி சிரஞ்சீவி ஆஞ்சநேயரின் பிரமச்சரியத் தூய்மையில் எந்த கேள்விக்கும் இடமில்லை.**

இனி அந்த வீரனின் கதையைப் பார்ப்போமா?

அவன் பெயர் மச்சவல்லபன்.

பல நாட்களாகத் தொடர்ந்த கடும் மோதலில் ராவணன் சோர்ந்துவிட்டான். ராம, லட்சுமணர்களின் தாக்குதல் அசுர பலம் கொண்டதாக இருந்தது. முடிவில் நிராயுத பாணியாகிவிட்ட அவனை **'இன்றுபோய் நாளை வா'** என்று திருப்பி அனுப்பிவிட்டார் ராமர்.

அரண்மனை திரும்பியவனுக்கு இனிச் செய்வதென்னவென்று புரியவில்லை. மூவுலகையும் கைப்பிடிக்குள் வைத்துள்ள இலங்கேஸ்வரனாகிய தன்னைத்தேடி தோல்வி நெருங்குவதை உணர்ந்தான்.

பிரயோகப்படுத்திவிட்ட அத்தனை யுத்த உத்திகளையும் விட்டுவிட்டு மாயச் செயல்களை நம்பினான். சீதையை கவர்ந்ததுபோல, ராம, லட்சுமணர்களையும் கவர்ந்துவந்து அடைத்து வைத்துவிட்டால், சுலபமாகக் கொன்றுவிடலாம் என்று முடிவு செய்தான்.

ஆனால் அவர்கள் இருப்பதோ அனுமனின் பாதுகாப்பில்! விடுவாரா ..?

ராவணனின் திட்டத்தை அறிந்துகொண்ட அவர் தனது வாலினால் ஒரு கோட்டையை அமைத்து, அதனுள்ளே இருவரையும் இருக்கச்செய்து, வெளியில் நின்று காவல் புரிந்தார். அவரின் அனுமதியின்றி யாரும் உள்ளே புக முடியாது. எத்தனையோ மாயாவிகளை அனுப்பியும், கோட்டையை நெருங்கக்கூட முடியவில்லை.

இறுதியில் தனது உறவினன் மயிலிராவணனை வரவழைத்து, எப்படியாவது இருவரையும் அனுமனின் காவலில் இருந்து கவர்ந்து வருமாறு கட்டளையிட்டான். மயிலி ராவணனோ பெரும் அசுர வீரன். மாயவித்தைகளில் கைதேர்ந் தவன். பெரும் பலசாலியான அனுமன் மாய விளையாட்டுக் களில் நாட்டமில்லாதவர் என்று அறிந்து கணக்குப்போட்டான். அவனது கணிப்பு வெற்றி தந்தது. விபீஷணன் நதியில் நீராடச்சென்ற சமயம் பார்த்து, அவரின் உருவில் கோட்டையை நெருங்கினான். அனுமனும் அனுமதிக்கவே உள்ளே சென்று ராமரையும், லட்சுமணனையும் பாதாள மார்க்கத்தின் ஊடாகத் தனது கோட்டைக்குக் கொண்டுசென்றுவிட்டான்.

அவனது கோட்டையோ, வெகு தூரத்தில் பயங்கர மான, பல தடைகளைக் கொண்டிருந்தது. தான் ஏமாந்து விட்டதை அறிந்து வருந்திய வாயுபுத்திரன் கடுங்கோபத்துடன் புறப்பட்டுச்சென்று அத்தனை தடைகளையும் உடைத்தெறிந்து, ராம,லட்சுமணர் இருந்த இடத்தை நெருங்கியபோது, அங்கு காவல்புரிந்த இளம் வீரன் வழிமறித்தான். அவனே மச்சவல்லபன்!

இருவருக்கும் கடும் சமர் ஏற்பட்டது. ஒருவரையொருவர் மிஞ்சும் வண்ணம் போர் புரிந்தனர்.

அச்சமயத்தில் இருவருக்கும் இடையே இனம்புரியாத பாசம் ஊடுருவுவதையும் உணர்ந்தனர்.

அவனின் வீரத்தைக்ண்டு 'நீ யார்?' என்று ஒரு கட்டத்தில் அனுமன் கேட்கவே, 'அனுமன் மகன்' என்று பதிலுரைத்தான். திகைத்து நிதானித்த அனுமனை நன்றாக அவதானித்துவிட்டு வீழ்ந்து வணங்கினான் மச்சவல்லபன்.

சீதையைத்தேடிக் கடலைக் கடந்தபோது, அனுமன் உடம்பில் வியர்த்து வழிந்த துளியொன்று மீனொன்றின் வாயில் விழவே, அது தாய்மை அடைந்தது. அந்த மச்சக்கன்னி பெற்றெடுத்த புதல்வனே இந்த மச்சவல்லபன். இந்த விபரத்தை அறிந்த ராமதூதன் சினம் தணிந்து அவ்வீரனை மன்னித்தார். ராம காரியத்திற்குத் தடையாக இருந்தமைக்கு வருந்திய மச்சவல்லபன் வாயிலைத் திறந்துவிடவே ராம,லட்சுமணர்களை மீட்டுச்சென்றார் அனுமன்.

என்ன நேயர்களே, இப்போது திருப்தியா? அற்புதமான நம் புராண, இதிகாசங்களிலே இதுபோன்ற சுவையான தகவல்கள் நிறைய உண்டு.

'பக்தி விஜயம்' தொடர்ந்து தரும் ..



# மாணவர் சமய அறிவுப்போட்டி இல : 03



**அ**ன்பான மாணவர்களே,

தங்களின் சமய அறிவைக் கண்டு வியக்கின்றோம். **இல: 01** போட்டிக்கான விடைகளை நீங்கள் அனைவருமே பெரும்பாலும் சரியாக எழுதியிருந்தீர்கள். இதில், அதிக மதிப்பெண்கள் எடுத்தவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் பரிசைப் பெறுகிறீர்கள். ஆயினும், கலந்துகொண்ட அனைவருமே திறமைசாலிகள், பாராட்டுக்குறியவர்கள் ..



இல: 01 போட்டிக்கான விடைகள் :

***01. திருக்கேதீஸ்வரம், 02. மார்கழி மாதம், 03. மாணிக்க கங்கை, 04. வைகுந்தம், 05. அனுமன், 06. திருமூலர், 07. பரசுராமர், 08. வடக்கு, 09. மச்சவல்லபன், 10. சிலாதர்***

**முதல் பரிசு :** இ. நிஷாந்தன், கிளி. இராமநாதபுரம் ம.வி. கிளிநொச்சி
**இரண்டாம் பரிசு :** ப. அபிநயா, தரம் 04, அ.த.க. பாடசாலை, வெள்ளாங்குளம்
**மூன்றாம் பரிசு :** ச. சிவசங்கர், தரம் 05, கிளி. வட்டக்கச்சி ம.வி..
ஏனைய மாணவர்களையும் வாழ்த்தி, எமது பாராட்டுக்களைப் பரிசாக அளிக்கின்றோம்!

---

**01. ஆடிப்பிறப்பன்று கூழும், ................................... கிடைக்கும்**
**02. தானே தோன்றுபவை .................... லிங்கங்கள் !**
**03. ராமாயணத்தில் அனுமன் ............. காண்டத்தில் அறிமுகமாகிறார்**
**04. மீராவுக்கு பிடித்த தெய்வம் ............................ ஆவார்**
**05. சிவனுக்குப் பிடித்த அர்ச்சனை ............................ இலையாகும்**
**06. முருகனை பராமரிக்க கார்த்திகைப் பெண்களுக்கு ...........பணித்தார்.**
**07. ஆடிமாதத்தில் மங்கையர்கள் நோற்பது ..................... விரதமாகும்**
**08. மகா பாரதத்தில் 'பிதாமகர்' என்று ................ அழைக்கப்பட்டார்**
**09. ஆதிஷேசன் உமையவள் சிறுவிரல் ............................ ஆகும்**
**10. சுந்தரருக்கு நெல் அனுப்பியவர் ..................................... ஆவார்.**



---

**வி**டைகளை எழுதி, **20.07.2012** க்கு முன் **ஆசிரியர், 'பக்தி விஜயம்', 555, புதுத்தெரு, மன்னார்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ( கத்தரித்து, பக்கத்தை வெட்டவேண்டாம். வேறு பேப்பரிலேயே அனுப்பவும். வாழ்த்துக்கள்!

**இந்த இதழிலேயே விடைகள் இருக்கின்றன என்பது ரகசியமாக இருக்கட்டும் !**

## ஆடி அமாவாசை ..

அமாவாசை என்றால் அது பொதுவாகவே விஷேசமான தினம் என்பது தெரிந்ததே ..

ஏனெனில், அது வளர் பிறையின் தொடக்க நாள் அல்லவா! கூடவே சூரியனும், சந்திரனும் நேர்க்கோட்டில் சந்திக்கும் நாளும் அதுவே. இவ் விரண்டால் மட்டுமின்றி நீத்தாருக்கு எள்ளும், தண்ணீரும் தந்து அவர்களின் ஆசிபலம் பெறுவதும் இதே அமாவாசையில் என்பதால் இத்தினத்தின் சிறப்புக்கு ஈடில்லை எனலாம்.



ஆடிமாதம் பிறந்த கையோடு தட்சிணாயணம் ஆரம்பித்து விடுகிறது. தட்சிணாயண புண்ணிய காலத்தில் வருகின்ற முதல் அமாவாசை இது என்பதால் சிறப்புப் பெற்று, 'ஆடி அமாவாசை' ஆகிறது.

இந்த நாளில் தீர்த்தங்களில் மூழ்கி எழுவது பெரும் புண்ணியத்தை தரவல்லது. அதிலும் கடலிலும், சமுத்திரத்திலும் நீராடினால் முன் வினைப் பாவங்களும் அகலும், முக்தி கைகூடும் என்பது ஐதீகம்.

வளர்பிறையின் முதல் நாளாகிய அன்றைய தினத்தில் மன இருள் களைந்தால், நெறி தவறா தர்ம வாழ்வு நிச்சயம்.

# ஆடிப்பூரம்



## ஆண்டாள் நங்கை!

ஸ்ரீ ஆண்டாள் சரிதம் அறியாதார் இருக்க முடியுமா? கண்ணன்மீது தீரா மையல் கொண்டு, காதல் ரசமிக்க கானங்களை பக்தி ரசம் கொட்ட கலந்து கொடுத்தவள். தமிழ்க் கவிதாயினியாகிய இந்த ஆண்டாள் அவதரித்தது, ஆடி மாசத்து பூர நட்சத்திரத்தில்தான்.

பெரியாழ்வாரின் நந்த வனத்தில் கண்டெடுக்கப்பட்டவள்..

பெருமாளுக்காக தொடுத்து வைத்திருந்த மலர் மாலையை தானே சூடிக் கொடுத்தவள்...

பரமாத்மாவை மணந்து அவரோடு ஐக்கியமானவள்!

அத்தகைய தெய்வத்தை வணங்கி அருள் பெற இந்த ஆடி மாதம் இன்னும் சிறப்பானது. இந்த ஆண்டாள் வேறு யாருமல்ல, சாட்சாத் பூமா தேவியே!



## கருட பஞ்சமி என்றால்..?

பெண்களால் பூஜிக்கப் படுகிறது இந்த கருட பஞ்சமி. ஆடி மாதம் பஞ்சமி திதியில் இது பின்பற்றப்படுகிறது.

திறந்தவெளியில் அமர்ந்து, கருட பகவானை நினைத்து செய்யப் படுகின்ற பூஜை இது. குளித்து ஆசாரமாக கணபதியை வழிபட்டு விட்டு, கருட பூஜைக்கு ஆயத்த மாக வேண்டும்.

திறந்த வெளி வேண்டு மென்பதால் வீட்டின் பின் பகுதி யையே அநேகமானவர் தேர்ந்தெ டுப்பார்கள். அங்கே ஒரு இடத்தை பசுவின் சாணத்தால் மெழுகி, கோலமிட வேண்டும். பின் ஒரு தட்டில் நெல்லைப் பரப்பி அதில் கலசத்தை வைத்து, அலங்கரித்த பின் இனிப்பான பல காரங்களை பிரசாதமாக வைக்க வேண்டும்.

தேங்காய், பழம், வெற் றிலை, பாக்கு, கல்கண்டு ஆகிய வற்றை நிவேதனமாக தந்து பக்தி சிரத்தை யோடு தீப, தூபம் காட்டி வழிபட வேண்டும்.

பூஜை முடிந்ததும் கருட தரிசனம் கிடைக்கும் என்பது கந்த புராணத்தில் விரத மகிமை என்ற பகுதியில் இருக்கும் குறிப்பாகும்.

கருட தரிசனத்தை பெற்ற வுடன் உபவாசத்தை முடித்துவிட்டு உண வருந்தலாம்.

முனிவர்களும், தேவர்களும் கூட இவ்விரதத்தை கடைப் பிடித்து பயன் பெற்றுள்ளனர். புத்திர பாக்கியம், மாங்கல்ய பாக்கியம், கருட தோஷ விலக்கு, பொருள் வரவு, தேக ஆரோக் கியம் ஆகியன இவ் விரதத்தால் கிடைக்கின்ற நன்மைகளாகும்.






## தீந்தமிழ் புராணங்கள் ..

ஒருநாள் முருகன் ஔவையின் தமிழோடு விளையாட பூமிக்கு வந்தார். 'சுட்ட பழம்' நாடகத்தை நடத்தி தமிழ்ப்பாட்டியோடு சிறிது நேரம் குறும்பு செய்துவிட்டு, தமிழில் வம்புக்கிழுத்தார் ..

''முக்காலும் உணர்ந்த ஔவையே, தீந்தமிழின் நாயகியே! நின் புலமையை அணிசேர்த்து சில ஐயப்பாடுகளை தீர்ப்பாயா ..? ''

''வேலவா, என் ஐயனே! தமிழுக்கே தலைவன் நீயன்றோ? .. அறிந்தும் அறியாதவன்போல் நீ என்னைச் சோதிக்கிறாய். இருப்பினும் கேள், சொல்கிறேன் ..'' என்றது தமிழ்ப்பெரு விருட்ஷம் ..

**''உலகிலேயே பெரியது என்ன?, அரியது என்ன? கொடியது என்ன? இனியது என்ன? ..''**

இந்த நான்கு கேள்விகளுக்கும் ஔவையார் விடையளித்தபோது அகில உலகமும் அசந்துபோனது! மேலானது என்று நாம் நினைப்பதற்கும் மேலானது உலகில் எத்தனையோ உண்டு என்பதை அவர் விளக்கிய பாங்கு தமிழுலகிற்கே புதுமையானது! அந்த தெளிவான பதிலும், சுந்தரமான தமிழும் முருகக்கடவுளை ஆனந்தத்தில் மூழ்கடித்தது ..

முதலாவதாக, **'உலகில் பெரியது எது'** என்ற கேள்விக்கு ஔவையின் பதிலுக்கான பாடலானது, கடலலைகளையும் கட்டிப்போட்டுவிடும் ஆற்றல் கொண்டது.

**அதன் விளக்கம் இவ்வாறு அமைந்தது** ---

''பெரியது கேட்கின்ற வடிவேலா ..!

நாம் கண்ணால் காண்கின்ற இந்த புவனம்தான் மிகவும் பெரியது. ஆனால், இதனைப் படைத்தவன் நான்முகனன்றோ! அதனால் அவன் அதனிலும் பெரியவனாகிறான். அந்த நான்முகனோ கரிய திருமாலின் உந்தியிடத்திலே பிறந்தவன். ''



**அதனால் பாற்கடற் பரந்தாமனே பெரியவன் என்றால் அதுவும் இல்லை ..**

''கேள் குமரா, திருமாலோ அலைகடலில் துயில்பவன். இதனால், நான்முகனிலும் திருமால் பெரியவன், அவனிலும் அலைகடல் பெரிதாகிவிட்டது. ஆயினும், அலைகடலோ ஒரு காலத்தில் அகத்தியரின் கையில் அடங்கியதாயிற்று. அகத்தியரோ கலயத்தில் பிறந்தவர்! '' ..

''கலயமோ புவியிடத்துச் சிறிதளவான மண். புவியோ ஆதிஷேடனுக்கு ஒரு தலைச்சுமை அளவே! '' ..

''ஆதிஷேடனோ, உமையவளின் சிறுவிரல் மோதிரத்தில் இருப்பவன். உமையோ, இறைவனின் ஒரு பாதியில் அடங்கி விடுபவள். இதனால், இறைவனே அனைத்திலும் பெரியவன் ஆகிறான்.'' ..

**அதனால் கைலாயத்து ஈசன் பெரியவரா? ..**

''வெம்மை பரவிய வேலோனே, .. பெரியவனான எம் சிவபெருமான் அன்பர்களின் உள்ளத்தே உலவி வருபவன். எல்லாம் வல்ல இறைவனை தம் உள்ளத்திலே கொண்டவரான தொண்டர்கள்தாம் உலகில் மிகவும் பெரியவர்கள். அவர்களின் பெருமை சொல்லில் வடிக்க முடியாத அளவுக்கு மிகமிகப் பெரியது ஆகும்.'' ..

என்று முடித்தார் ஔவைப்பெருங்கவி .. தேனின் சுவைகூட நிகர் நிற்க முடியாத அந்த தீந்தமிழ் பாடல் இதுதான் ..





**''பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!**
**பெரிது பெரிது புவனம் பெரிது**
**புவனமோ நான்முகன் படைப்பு**
**நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்**
**கரியமாலோ அலைகடல் துயின்றோன்**
**அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்**
**குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்**
**கலசமோ புவியிற் சிறுமண்**
**புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்**
**அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்**
**உமையோ இறைவன் பாகத்து ஒடுக்கம்**
**இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்**
**தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே! ''**

*இப்படியான ஒரு விளக்கமும், அதை தெளிவாக புரிய வைக்கும் நுட்பமும் இந்த தமிழ் மூதாட்டியை விட்டால் யாருக்கு வரும் ..!*

***(நன்றி: ஔவையார் தனிப்பாடல்கள்)***





## தெய்வீக தகவல்கள் அறிவோம்!






### சிவாலயங்களில் அருவமோ, உருவமோ இன்றி அதிசய தரிசனம் தருகின்ற மூர்த்தம் சிவலிங்கம்!

# சிவலிங்க மகிமை!

**பீ**டம், லிங்கம் எனும் இரு பிரிவுகளாக எம்பெருமான் நிலை கொள்கின்ற லிங்கம் அமைகிறது. 'பீடம்' எனப்படுகின்ற பகுதி தரையிலிருந்து மேலே எழுந்து லிங்கத்தை தாங்கி நிற்கிறது. இதனை 'ஆவுடையார்' என்றும் அழைப்பதுண்டு. வட்டமாகவோ, சதுரமாகவோ, ஆறு கோணங்களைக் கொண்டதாகவோ இது அமைக்கப்படுகிறது.

இதன் மேலே உருளை வடிவத்தில் அமைவதுதான் 'பாணம்' என்ற பொருள் தருகின்ற 'லிங்கம்' ஆகும்.

பொதுவாக மூன்று பாகங்களாக பிரிக்கப்படுவதாக லிங்கம் இருக்கும். மேலே காட்சி தருகின்ற உருளை வடிவான 'லிங்கம்' ருத்ரபாகம் என்று வழங்கப்படுகிறது.

பீடத்தினுள் இதே அளவுக்கு மறைந்திருக்கும் பகுதி 'விஷ்ணு பாகம்' என்றும், அதன்கீழ் வரும் ருத்ர பாகம் அளவே இருக்கும் பகுதி 'பிரம்ம பாகம்' என்றும் வழங்கப்படுகிறது.

வட்டவடிவ உருளையாக ருத்ரபாகம் இருக்க, விஷ்ணுபாகம் எட்டு பட்டையாகவும், பிரம்ம பாகம் நான்கு பட்டையாகவும் இருக்கும் வண்ணம் அமைப்பார்கள்.

தேசாச்சார வழக்கப்படி இந்த அளவுகளில் மாற்றங்களும், வித்தியாசங்களும் இருக்கலாம்.

பீடத்திலிருந்து நீர் வந்து விழும் பகுதியை 'நாளம்' என்று அழைப்பார்கள்.

பிரம்ம பாகத்தின் அடிப்பாகத்திலிருந்து இரண்டு மெல்லிய கோடுகள் மேல் நோக்கிச்சென்று குவியும். இதற்கு 'பிரம்ம சூத்திரம்' என்று பெயர்.

பொதுவான தன்மையை கொண்டு இரு வகையாக சிவலிங்கம் பிரிக்கப்படுகிறது. அசையும் தன்மை கொண்ட 'சலலிங்கம்' எனவும், அசையாமல் ஒரே இடத்தில் நிலை கொண்டிருக்கும் 'அசல லிங்கம்' எனவும் அவை அழைக்கப்படுகின்றன..

ஒவ்வொரு ஆகமமும் லிங்கங்களின் வகையை **4, 6, 9** என பல்வேறு எண்ணிக்கையில் தெரிவிக்கின்றன.

தெய்வீகம், ஆர்ஷிகம், காணபம், மனுஷ்யம், என நான்கு வகையென்றும், இவற்றுடன் சுயம்புலிங்கம், பாணலிங்கம் இரண்டையும் சேர்த்து ஆறு எனவும் குறிப்பிடுவார்கள்.

அசையும் லிங்கமான சலலிங்கங்கள் மண், உலோகம், நவரத்தினம், மரம், கல், மாவு, மஞ்சள் போன்றவற்றால் செய்யப்படுகின்றன.

சுயம்பு லிங்கங்கள் என்பன தானே தோன்றுவதாகும். இந்தியாவில் **69** இடங்களில் சுயம்பு லிங்கங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

'ஷண லிங்கம்' அல்லது 'ஷணிக லிங்கம்' என்பவை அந்தந்த நேர பூஜைக்காக ஆவாகனம் செய்யப்பட்டு, பயன்படுத்தப்படுகின்ற லிங்கங்களாகும். அரிசி, சாதம், மண், களி மண், பசுஞ்சாணம், வெண்ணெய், ருத்ராட்சம், சந்தனம், தர்ப்பம், பூ, வெல்லம் மற்றும் மாவு போன்ற பொருட்களினால் இவை செய்யப்படுகின்றன. அவை அந்தந்த பூஜை முடிந்தவுடன் அந்தந்த பொருட்களுடன் உரிய முறையில் சேர்க்கப்படும்.

### உருவமும், வகையும் வேறுபடும் லிங்கங்கள்!

தானே தோன்றுவது - சுயம்பு லிங்கம், தெய்வங்களால் உருவாக்கப்பட்டது - தெய்வீக லிங்கம், கணங்களால் படைக்கப்படுவது - காணலிங்கம், ரிஷிகளால் உருவாவது - ஆர்ஷ லிங்கம், ராட்ஷசர்களால் தருவிக்கப்படுவது - ராட்ஷச லிங்கம், மனிதர்களால் உருவாவது மனுஷ்ய லிங்கம்.

இயற்கைப் பொருட்களான வெள்ளரிப்பழம், எலுமிச்சை, விளாம்பழம், பனம்பழம் போன்றவை சிவலிங்க ரூபங்களாக கருதப்படுகின்றன.

ஆதாரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, கி.மு. முதலாவது நூற்றாண்டுக்கு முன்பிருந்தே சிவலிங்கங்களும், சிவலிங்க வழிபாடுகளும் இந்தியா எங்கினும் நீக்கமற நிறைந்து, பல்வேறு மக்களால், பலவேறு வழிகளால் வழிபடப்பட்டு வந்துள்ளன என்பது தெரிகிறது.





## சிவலிங்க பூஜையின் பலன்கள் ..

**கீழ் வருகின்ற பொருட்களினால் செய்து வழிபடும்போது கிடைக்கின்ற பலன்கள் ..**

| | | |
|---|---|---|
| சாதம் | - | நல்லுணவு கிட்டும் |
| தங்கம் | - | செல்வம் பெருகும் |
| களி மண் | - | ஸ்தாவர சொத்துக்கள் சேரும் |
| பசுஞ்சாணி | - | நோய், நொடி விலகும |
| வெண்ணெய் | - | மன மகிழ்வு ஏற்படும் |
| ருத்ராட்ஷம் | - | ஞானம் பெருகும் |
| சந்தனம் | - | அனைத்து நலன்களும் உண்டாகும் |
| தர்ப்பை | - | ஆன்ம விடுதலை கிட்டும் |
| பூ லிங்கம் | - | நீண்ட ஆயுள் கிட்டும் |
| வெல்லம் | - | அனைத்து பிரச்சினையும் தீரும் |
| மாவு | - | உடல், மன உறுதி வரும் |

### அங்க பிரதட்சணம் ஏன்?

ஒரு கோயிலுக்கு எத்தனையோ ஞானிகளும், மகான்களும், புண்ணிய புருஷர்களும் வந்து மோட்ஷம் அடைந்திருப்பர். அவர்களின் திருப்பாதம் பட்ட இடங்களில் நமது முழு உடம்பும் படும்படியாக இறைவனை வணங்கும்போது பாவங்கள் களைந்து, கருணை கிடைக்கின்றதாக ஐதீகம் கூறுகிறது ..





# விரத சமையல்கள் ..

தொடர்ச்சி -- 02



## உப்பு அடை ..

( விஷேட, விரத நாட்களில் சிறந்த நைவேத்தியம் இது )

**செய்முறையிலோ, பொருட்களிலோ சென்ற இதழில் நாம் வெல்ல அடை செய்தது போன்றதே இதுவும். சிறிதளவே வித்தியாசம் ..**

**தேவையான பொருட்கள்:**
வெல்ல அடைக்கு வெல்லம் தேவைப்பட்டதுபோல இந்த அடைக்கு தேவைப்படுவது உப்பு. அதோடு இஞ்சி, பச்சை மிளகாய், கடுகு, உளுந்து இதெல்லாம் தேவை.

வாசனைக்காக கறிவேப்பிலை, பெருங்காயம் சேர்க்கலாம். தேவையான அளவு உப்பும் வேண்டும்.

**செய்முறை :**

கடுகு, உளுந்து இரண்டையும் போட்டு தாளிக்கவும். இஞ்சி, பச்சை மிளகாய் இரண்டையும் பொடியாக நறுக்கி, அதில் போட்டு வதக்கவும். பின்னர் தண்ணீர் விட்டு, தேவையான அளவு உப்பும் இட்டு கொதிக்கவிட வேண்டும். கொதிக்கின்ற வேளையில், காராமணியை சேர்த்துவிட வேண்டும்.

வெல்ல அடைக்கு செய்தது போலவே, மாவைக் கொட்டி கட்டி வராமல் கிளறவேண்டும். மாவு வெந்ததும் இறக்கி வைத்து, சூடு ஆறியதும் அடையாகத் தட்டி வேகவிடவேண்டும். அவ்வளவுதான்.

**வீட்டுப் பூஜைகளில் படைப்பதற்கு அரிய வகை பிரசாதம் இதுவாகும்**

**ஆலயத்தை வலம் வரும்போது, வேகமாக நடப்பதும், கைகளை வீசுவதும், உரையாடுவதும் தவறு. நிதானமாக, தெய்வ சிந்தையில், மெய்யின்பத்தோடு வலம் வரவேண்டும் ..**



**நம் உள்ளங்கைகளின் கீழே, நடுவே, மேலே முறையே உமை, சரஸ்வதி, லட்சுமி பொருந்தியிருப்பதால், காலையில் கண் விழித்ததும், இரண்டு உள்ளங்கைகளையும் தேய்த்து, கண்களில் ஒற்றிக்கொண்டு, உள்ளங்கைகளைப் பார்க்க வேண்டும் ..**







## சிவனருள் வேண்டுமா, ஒரே ஒரு வில்வம் போதுமே!

வில்வ இலையின் சிறப்பை நாம் எப்போது முழுமையாக அறிகின்றோமோ, அப்போதே சிவபெருமானின் கருணை நம்மீது விழுந்துவிட்டது என்று பொருள். அத்தனை மகத்துவம் மிக்கது வில்வம்! பெருமானின் முக்கண்களாக தோற்றமுடைய வில்வ இலையிலும், அதைத் தாங்கிய வில்வ மரத்திலும் மகாலட்சுமி வாசம் புரிகின்றாள். இலையின் மூன்று தளங்களிலும் **இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி** ஆகிய அதிதேவதைகள் இருக்கிறார்கள். எத்தனை விதமான மலர்களால் அர்ச்சித்தாலும், ஒரு வில்வ இலையால் அதிகமாய் மகிழ்ந்துவிடுகிறார் ஈஸ்வரன். வீட்டில் பூஜை செய்ய வசதியில்லாதவர்கள் தனது கையாலேயே வில்வத்தைப் பறித்து, அல்லது கிடைக்கின்ற இடங்களில் வாங்கி பூஜைக்கென சிவாலயங்களில் கொடுத்தால் பாவங்கள் விலகும். நன்மைகள் கிட்டும். **திங்கட்கிழமை, அமாவாசை, சதுர்த்தி, அஷ்டமி, நவமி, பௌர்ணமி. மாதப்பிறப்பு** ஆகிய நாட்களில் வில்வ இலையைப் பறிக்கக்கூடாது. முதல்நாள் பகல்வேளைக்கு முன்னதாகப் பறித்து வைத்துக்கொள்ளவேண்டும். உலர்ந்து காணப்பட்டாலும், ஏற்கனவே சிவபூஜையில் பயன்படுத்தப் பட்டிருந்தாலும் வில்வம் சக்தியானதுதான். அதை மீண்டும் பூஜைக்குப் பயன்படுத்தலாம். வில்வ மரத்திற்கு **'ஸ்ரீவிருட்ஷம்'** என்றும், அதன் பழத்திற்கு **'ஸ்ரீபலம்'** என்றும் பெயருண்டு. வில்வ மரத்தைப் பார்ப்பதும், தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்வதும், பிரதட்ஷணம் செய்வதும் பெரும் புண்ணியமாகும்.

## ஆலயம் சென்று வந்த பின் ..

ஆலயத்திற்கு வெளியே வந்த பின்பும் இறைவனையே நினைக்கவேண்டும். அங்கு அனுபவித்த ஆதமார்த்த இன்பத்தை நீண்டநேரம் தக்க வைக்கவேண்டும். வீடு சேர்ந்ததும் கால்களை உடனேயே கழுவுதல் கூடாது. ஆலயத்துள் செல்லும் முன்பும், வெளியே வந்த பின்பும் கோபுர தரிசனம் மிக முக்கியம்.

# திருஷ்டியில் காப்பாள் துர்க்கை அம்மன்!

கண் திருஷ்டியால் கவலையா? பயப்படாதீர்கள். நிவாரணம் இருக்கிறது. சிலரது கண்களின் கதிர்வீச்சுக்கள் எதிரில் இருப்பவரைத் தாக்கவல்லன. இதனால் அவரது காரியங்களில் தடைகளும், தாமதங்களும் ஏற்படுகின்றன. இதுதான் கண் திருஷ்டி. அழகான குழந்தை ஒன்றின்மீது சிலரின் பார்வை வீழ்ந்தால் அக்குழந்தை கத்த ஆரம்பிக்கும். அதனின் தூக்கம், சாப்பாடு, சந்தோஸம் பாதிக்கப்படும். இதற்காக அதன் கன்னத்தில் கறுப்பு பொட்டு வைப்பர். கைகளில் காசிக்கயிறு கட்டுவர். பெரிய வீட்டைக்கட்டி, கிரகப்பிரவேசம் செய்யும்போது எல்லோரின் பார்வையும் ஒன்றுபோலிருக்காது. எனவே, வீட்டின் முன்னால் **திருஷ்டி பூசனிக்காய்** தொங்கவிடுவர்.

முறையான ஹோமங்கள் இம்மாதிரியான எதிர்வினைகளைத் தடுத்து நிறுத்துகின்றன. **கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம், சரஸ்வதி ஹோமம், தன்வந்திரி ஹோமம்** என்ற பல ஹோமங்களில் பொருத்தமானதை வந்தனைக்குறிய குருக்களின் மூலமாகத் தெரிவு செய்து அவர்களால் நடத்தலாம். வீட்டிலோ, கோவிலிலோ இவற்றை நடத்தும்போது திருஷ்டியிலிருந்து சுகமாய் விலகலாம், இன்பங்களை இல்லத்திற்கு வரவழைக்கலாம்.

**தேவி துர்க்கை வராஹியை** வழிபடுவது திருஷ்டியை கலைய அதிசிறந்த வழியாகும். நல்ல திறமையிருந்தும் முன்னேற முடியாதவர்கள், நாள் பட்டும் மணவாழ்க்கை கிட்டாதவர்கள். தொட்ட விஷயத்தில் தடை காண்பவர்கள், நல்ல நிலையிலிருந்து வீழ்ந்தவர்கள் யாவருக்கும் இந்த அம்பாளின் வழிபாடு கண்கண்ட மருந்தாகும்..

ஆண்கள் அரைஞான் கயிறு கட்டும் வழக்கமும் திருஷ்டியின் பொருட்டேயாம். இதுகூட ஜீரண மண்டலத்தையும், சிறுநீரகத்தையும், தண்டுவடத்தையும் சரியாக இயங்க வைப்பதாக விஞ்ஞானம் கூறியிருக்கிறது. தேகத்தில் கட்டுகின்ற கயிறு உடல் நலத்தைப் பேணுவதைப்போல கறுப்பு வண்ணக்கயிறு, உலோகங்கள், காப்பு வடிவங்கள் நம் கைகளில் இருந்தால், திருஷ்டி, தோஷங்களில் இருந்து விடுபடலாம், சந்தோஸமாய் வாழலாம் !






## கல்லும் கசியும் காவியங்கள்..

## புராண மங்கையரின் மாசற்ற பக்தி!

**உதயப்பூர் என்ற பெயரோடு உத்தம குணங்களோடு விளங்கிய நகரம் அது. ஒரு காலத்தில் பாண்டவர்களின் தலை நகராகவும்கூட இருந்தது. மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் கண்ணைப் பறிக்கும் ..**

நீர், நில வளங்களோடு தெய்வ பக்திக்கும் பேர்போன அந்த ஊரின் மக்கள் கலா ரசிகர்களும்கூட. கண்ணனின் மேல் தீரா அன்பு கொண்ட அவ்வூரில் எங்கு பார்த்தாலும் உபன்னியாசங்களும், பஜனைகளும், பூஜைகளும் நடந்துகொண்டிருக்கும். அப்படியொரு பிரேமை அவரிடத்தில் அவர்களுக்கு.

இத்தனை சிறப்பான தலத்தை ஆண்டு வந்த பேரரசனின் பெயர் பூநாயகன். அவனது பட்ட மகிஷி சந்திரமுகி!

இறைவனிடத்திலும், குடிகளிடத்திலும் பேரன்பு கொண்டு ஆட்சி நடத்திய அவர்களுக்கு கண்ணன் அருளால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு அவர்கள் மீராபாய் என்று ஆசையோடு பெயர் வைத்தார்கள்.

மீரா என்று எல்லோராலும் வாஞ்சையோடு நேசிக்கப்பட்ட அவள் சிறு வயதிலேயே கிருஷ்ணனை பூஜிக்க ஆரம்பித்து விட்டாள். நாளடைவில் பெரும் பக்தி ஊற்றெடுக்கவே, எந்நேரமும் கண்ணனின் விக்கிரகத்தை பிரியாமல் இருந்தாள். ஏனைய குழந்தைகளுடன் சேர்வதும் குறைந்தது. அப்படி விளையாடினாலும், அதுவும் சுவாமி விளையாட்டுத்தான். பட்டுத்துணிகளாலும், ஆபரணங்களாலும் கண்ணனுக்கு அடிக்கடி அலங்காரங்கள் நடக்கும். உண்ணும்போதும், உறங்கும்போதும், விளையாடும் போதும் அவரைப் பிரிவதே இல்லை.

### பக்தி காதலாக மாறியது ..!

அரண்மனையிலும், கோவில்களிலும் நடக்கும் பாகவதம், மகா பாரதம், பகவத் கீதை போன்ற உபன்னியாசங்களை தவறாமல் கேட்டு, மெய் மறந்து போவாள். அன்பு பக்தியாகி, பக்தி பிரேமையாகி, அது கொஞ்சம் கொஞ்சமாக காதலாகி வருவதை உணரத் தலைப்பட்டாள்.

மதுசூதனனின் திருவிளையாடல்களும், வீர சாகஸங்களும் கேட்டு பேரின்பம் கொண்ட மீரா, அடைந்தால் அவனையே கணவனாக அடைவது என்ற முடிவுக்கும் வந்துவிட்டாள்.

இளமையிலேயே சங்கீத ஞானத்தில் தேர்ச்சி பெற்றிருந்ததால், ஸ்ரீகிருஸ்ணனின் சங்கீர்த்தனங்களைப் பாடிப் பரவசிக்கும் ரசிகையானாள்.



வளர்ந்து பருவமடைந்ததும், தோழிகளுடன் கன்னி மாடத்தில் வாழும் அரச வழக்கத்தை ஏற்றுக்கொண்டவளுக்கு கன்னி மாடமும் கண்ணனின் கோயிலாகவே காட்சியளித்தது. அவனின் கர்ப்பக்கிரகமாகவே அதுவும் தோன்றியது.

அப்புறமென்ன, தங்க மயமான பீடத்தில் அங்கே மாதவனை பிரதிஷ்டை செய்தாள். திருமஞ்சன ஆராதனையும், பொன், மணிகளால் அலங்காரமும், திருச்சாத்து முறைப்படி நைவேத்தியமும் தந்து பூஜித்து வரலானாள்.

எந்நேரமும் சங்கீத பஜனைதான். அந்தப்புரம் சத் சங்க மண்டபமாக மாறியது. புண்ணிய புருஷர்களை அழைத்துவந்து கிருஸ்ண கதா காலட்ஷேபம் செய்ய வைத்து கேட்டு மகிழ்ந்தாள்.

மீராவின் சிந்தை ஒரேயடியாகவே கண்ணனிடம் கலந்துவிடவே, எந்நேரமும் **''கண்ணா, மணி வண்ணா ..! ''** என்றே உதடுகள் உச்சரித்தன ..



## *மீராவை நோக்கி அவதூறுகள்!!*

இப்படி பாட்டும், பஜனைகளுமாகவே பரந்தாமனின் அடியார்களோடு நாளைக் கழித்துக்கொண்டிருந்த மீராவைப்பற்றி ஊர் மக்கள் வாய்க்கு வந்தவாறு பேசத்தலைப்பட்டார்கள். நாளடைவில் இது மன்னனின் காதுக்குப் போனது. அதிர்ச்சியுற்ற நிலையில் அந்தப்புரம் சென்று மகளுக்கு அறிவுரை கூறினான் வேந்தன் ...

**''கண்ணே, பருவமடைந்த நீ கன்னியரோடு கன்னிமாடத்தில் அந்தரங்கமாக வாழ்வதன்றோ சிறப்பு! அப்படியிருக்க, பக்த கோடிகளோடு இங்கே பாட்டும், கேளிக்கையுமாக இருத்தல் தவறன்றோ? நம் குடிமக்கள் புகாரிடுகின்றனரே .. நாம் இவர்களுக்கு பதில் சொல்லவேண்டுமல்லவா ..? ''**

என்றுவிட்டு மேலும் எடுத்துச் சொன்னான் .. **''இப்படியான அவச்சொற்கள் மேலும் வராமலிருக்க, தகுந்த ராஜகுமாரனை தெரிவு செய்து மணம் செய்ய சம்மதிப்பாயாக ..''**

இவ்வார்த்தைகளால் துன்பமடைந்த மீராபாய்,

**''தந்தையே, உண்மையை உணர்ந்து பார்க்கச் சக்தியற்ற ஊராரின் கூற்றைக்கேட்டு, என் மனதைப் புண்படுத்தா தீர்கள். குன்றைக் குடையாகப்பிடித்து பக்தர்களைக் காத்த பரமாத்மாவுக்கு நான் என்னையே காணிக்கையாகத் தந்து வெகு நாளாகி விட்டது .. ''** என்று கண்ணீர் சொரிந்தாள்.

## *மாசற்ற பக்தியை புரிவாரில்லையா ..?*

**''என் நந்த கோபாலனை நினைப்பதும், அவரது சங்கீர்த்தனங்களை பாடி ஆடுவதும் எனக்கு ஆனந்தம் தரும் வாழ்வாக இருக்கிறது. ஆதலால், என் விருப்பத்ததைத் தடுக்காதீர்கள்.''** ..

என்ற மீராவின் வார்த்தைகளால் பதிலேதும் சொல்லாமல் அவ்விடத்தைவிட்டு அகன்றான் அரசன். நேராக மனைவி சந்திரமுகியிடம் சென்று நடந்ததை விபரித்தான். மகளிடம் எடுத்துக்கூறி மன மாற்றத்தை ஏற்படுத்தும்படி அரசியை பணித்தான். அவ்வாறே சென்று மகளிடம் மன்றாடிய தாயின் முயற்சியும் பலனற்றுப்போனது.

இப்படி மன்னனால் எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் மீராவின் கண்ணன் பற்றை அதிகரித்ததே தவிர குறைக்கவில்லை.

## *தாயின் கையால் விஷம்!*

தோல்விகளால் துவண்டுபோன மன்னனுக்கு மகளின் மீது அளவற்ற வெறுப்பு உருவானது. பிள்ளைப்பாசம் மறைந்துபோய் விரோதம் தலையெடுத்தது. வாஞ்சை மறைந்துபோய் வஞ்சம் பிறந்தது.

பாலூட்டி, சீராட்டி வளர்த்த அருமை மகளை விஷம் கொடுத்து கொல்லவும் துணிந்தான். மனைவியின் கையில் விஷத்தைக் கொடுத்து மகளிடம் பருகத்தரும்படி கட்டளையிட்ட போது துடித்துவிட்டாள் தாய்.

இருந்தும் பர்த்தாவாகவும், வேந்தனா கவும் இருப்பவனின் ஆணையை மீறுவது எங்கணம்?

வைரக்கிண்ணத்தில் பாலும், தங்கத் தட்டில் பழரசமும் ஏந்தி வந்து மகளுக்கு ஊட்டிய அரசிக்கு அதில் ஏற்கனவே கலக்கப் பட்டிருந்த கார்க்கோடக விஷத்தின் பயங்கரம் தெரியும். நெருங்கி வந்த தாயின் தோற்றத்தில் தெரிந்த வேதனையும், தவிப்பும் மீராவுக்கு நடக்க இருப்பதை உணர்த்தின.

தந்தையின் சூழ்ச்சியையும், தாயின் குமுறலையும் உணர்ந்துகொண்ட அந்த கிருஷ்ணபக்தை புன்னைகையோடு விஷம் கலந்த அந்த பாலை வாங்கினாள்.

### *அமுதமாக மாறியது விஷம்!*

ஒரு கையில் கண்ணனின் விக்ரகம். மறு கையில் விஷக்கிண்ணம். பரந்தாமனை மனதிலே தியானம் செய்தாள். தேனினும் இனிய அவனது நாமங்களை தன் சுந்தரக்குரலால் ஒலித்து தோத்திரம் செய்தாள்.

**‘‘தாயே, வருந்தாதீர்கள் .. நஞ்சும் என் நாயகனால் அமுதமாக மாறும் ..’’** என்று சொல்லிவிட்டு விஷத்தைக் குடித்தாள்.

என்ன ஆச்சரியம்! அவளின் கையிலிருந்த விஷக்கிண்ணத்தில் அவள் சொன்னதைப் போலவே அமுதம் வந்து சேர்ந்தது. மாறாக, விஷமானது மறு கையிலிருந்த கண்ணனின் விக்ரகத்தைச் சென்றடைந்தது. நீலமேக நிறமாக விக்ரகம் மாறியது.

இதைக் கண்ணுற்ற அரசியால் அதிர்ச்சியை தாங்க முடியவில்லை. மகளின் பக்தியை எண்ணி பிரமித்தாள்.

இதைக் கேள்வியுற்ற மன்னன் அரசவையி லிருந்து கன்னி மாடம் நோக்கி ஓடிவந்தான்.





### *துடித்தான் மாமன்னன்!*

மகளைப்பார்த்து கண்ணீர் விட்டழுதான் வேந்தன். பெற்ற மகளுக்குச் செய்த துரோகத்தை எண்ணி மனம் நொந்து கதறினான்.

**‘‘ என் மகளே மீரா, .. என்னை மன்னித்து விடம்மா .. ’’** என்று அவன் புலம்பி அழுதான். செல்ல மகளைக் கொல்லத்துணிந்ததை எண்ணித் துடித்தான், துவண்டான். உடல் பதறி வார்த்தைகள் வெளிவரத் தவித்தன.

**‘‘என் செல்லமே, .. தந்தையாகிய நானே உனக்கு எமனாக வந்தேனேயம்மா..! நாளெல்லாம் அந்தக் கண்ணனை பாடிய உன் பக்தியை அறியாமல் போனேனே! நான் பாவி. எனக்கு மன்னிப்பே கிடையாது. ஹே, பரமாத்மா ..! என்னை மன்னித்துவிடு ..’’**

கதறியவாறே கண்ணனின் விக்ரகத்திற்கு முன்னால் அடியற்ற மரம்போல விழுந்தான்.





தந்தையின் தவிப்பைப் பார்த்த மீரா வேதனையுற்றாள். வேகமாக குனிந்து தாங்கி அணைத்தபடி உட்கார வைத்தாள். வழிந்தோடிய அவனின் கண்ணீரைத் துடைத்தாள். அவளின் கரங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றியவாறே பாசத்தோடு மகளைப் பார்த்தான் மன்னன். அவளைக் கரம்கூப்பித் தொழுதான்.

இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த கிருஷ்ண பக்தர்கள் மெய்யுருகி பஜனை பாடினார்கள்.

**''ஹரே கிருஷ்ணா! ஹரே முகுந்தா! ஹரே நந்தகோபாலா! ஹரே காளிங்க நர்த்தனா! ..''** என்ற கோஷங்கள் அரண்மனையையும் தாண்டி ஊரெல்லாம் ஒலித்தன.

### கண்ணன் ஏற்ற விஷம்!

பக்தர்களின் நாம சங்கீர்த்தனங்களும், மீராவின் பக்தியும் பொங்கிப் பெருகிய அச்சமயத்தில் இன்னொரு அற்புதமும் நடநந்து. கிருஷ்ணனின் விக்ரகத்தில் விஷத்தால் ஏற்பட்டிருந்த கறுமை நிறம் காலைப் பனியைப்போல நீங்கியது. அப்போதுதான் பூத்த மல்லிகையாக பளிச்சென்று மின்னியது விக்ரகம்!

பிறகென்ன தடை? மீராவின் ஸ்ரீகிருஸ்ண சேவை இன்னும் பரிணமித்தது. சிங்காரக்கண்ணனின் திருமேனியை சிந்தை மகிழச் சேவித்தாள். தசாங்க தூபங்களும், மங்கள ஆரத்திகளும் ஹரிதேவனுக்கு கிடைக்காத நேரமே இருக்கவில்லை.

### கனவு நிறைவேறியது ..

மீராவின் புகழ் எங்கும் பரவியது. பகவத் கைங்கர்யத்தை செய்வதற்கு இப்போது எந்தத்தடையும் இருக்கவில்லை..

என்னே பேறு ..! ஒருநாள் பகவான் மீராவின் முன் தோன்றினார். அவரின் பிரசன்னத்தால் ஸ்தம்பித்தாள் மீரா. தன்னை மறந்து தியான ஸ்லோகங்களை மெய்யுருகி பொழிந்தாள். சுந்தரமாக பாடிப் பரவசமானாள்.

**''கண்ணா, கண்ணா ..!''** என்று அவரின் பாதாரவிந்தங்களில் சரணபுகுந்தாள். அந்த மாசற்ற பக்தையை தன்னோடு ஐக்கியமாக்கிக்கொண்டார் மாதவன்.

வேந்தனும், மக்களும் மீராவை தெய்வமாக வழிபடத்தொடங்கினார்கள். ஸ்ரீகிருஷ்ணனுக்கும், மீராபாய்க்கும் சேர்த்து அழகான கோயில் கட்டி பிரதிஷ்டை செய்தார்கள் ..

அனுதினமும் அக்கோயிலில் திவ்ய நாம பஜனைக் கீர்த்தனங்களும், பூஜைகளும் நடந்து வரலாயின. மீராவின் அருளால் அவளது பெற்றோர்களுக்கும் வைகுண்ட பிராப்தி கிடைத்தது.

***மீரா*** *கணவனின் வீட்டார்களால் பல தொல்லைகள் மீராவுக்கு ஏற்படுகின்றன.*

*மீராவின் பக்தியைக் கேள்விப்பட்ட அக்பர் சக்கரவர்த்தி மாறுவேடத்தில் அவளின் கோயிலுக்கு வந்து, முத்து மாலையொன்றை காணிக்கையாக அளித்துவிட்டுச் செல்கிறார். பக்தியில் கண்ணனோடு ஒன்றியிருந்த மீராபாய் இதனைக் கவனிக்கவில்லை. இதனைக் கேள்விப்பட்ட அவளின் கணவன் தவறாகப் புரிந்துகொண்டு, மீராவை கேவலமாகப் பேசுகிறான்.*

*மனம் நொந்துபோன மீரா அரண்மனை வாழ்வை வெறுத்து, கணவனையும் ஒதுக்குகிறாள். கண்ணனோடு மகிழ்ந்து நிரந்தரமாக வாழ்வதற்கு பிருந்தாவனம் நோக்கிச் சென்றுவிடுகிறாள்.*

*மீரா சென்றதும் மேவார் நாட்டின் ஒளி மங்கியது. தவறை உணர்ந்தான் மன்னன். தெய்வமாக தொழவேண்டிய பதிவிரதா சிரோன் மணியை இகழ்ந்துவிட்டோமே என்று அழுதான்.*

*மீராவிடம் சென்று மன்னிக்கும்படி கண்ணீர் விட்டான். மனமிரங்கி மீண்டும் அரண்மனைக்கு திரும்பிய மீரா, தனது அந்தப்புர கண்ணன் சன்னிதானத்திலேயே வாழ்ந்து ஒருநாள் கண்ணனிடம் சங்கமித்தாள்.*

*ராதையைப்போல, ஆண்டாளைப்போல கண்ணனே மூச்சென வாழ்ந்த இந்த தூய தேவதையின் கீர்த்தனைகள் இன்றும் பாடப்படுகின்றன ..*



# ஆடிப் பெருக்கு!

அற்புதமான ஆடி மாசம் வந்துவிட்டது
அதன் அருமைகள் இதோ..!

ஆடி மாதம் என்றாலே கொண்டாட்டத்தின் அடையாளம்தான் ..

நிலமங்கை குதூகலத்தோடு தன் நீர் வளங்களை ஊரெங்கும் அனுப்பி, செழிக்க வைக்கின்ற மாதமாகும் இது. ஆறுகளில் நீர் பெருக்கெடுத்து வரும்போது ஆடித்திங்களில் மகிழ்ந்து வரவேற்பது நம் இந்துக்களின் பாரம்பரியம்.

ஊராரெல்லாம் அறுசுவை உணவுகளை தயாரித்துக்கொண்டு குடும்பத்தோடு ஆற்றங்கரைகளுக்கு வந்து விடுவார்கள். தண்ணீரில் இறங்கியும், மணல் பரப்புகளில் ஆடிப்பாடியும், விருந்துண்டு களிகொள்வர் ..

**'புனலாடுதல்'** என்ற இனிய பழந்தமிழ்ச் சொல்லின் பொருள் குறிக்கும் இந்த நிகழ்ச்சியை ஆடி மாதத்தில் இந்தியர்கள் வெகு சிறப்பாக களிப்பார்கள். நதிகளுக்கு அங்கே கிடைக்கின்ற கௌரவம் உலகில் எங்கும் கிடைக்காது. கங்கா நதியை தமது தாயாகவே கருதுவர். எந்த கருமத்தையும் தொடங்கும்போது **'கங்கா மாயிக்கு ஜே ..'** என்று கோஷமிட்டே செய்வார்களாம். மாயி என்பது தாயின் அர்த்தமாம் ..

ஆடிப்பிறப்பன்று கூழும், கொழுக்கட்டையும் வாசனை பொங்க வயிறுகளை நிறைத்துவிடும். அன்றைய தினத்தில் வருகை தரும் பிதுர்களுக்காக விருப்பமான உணவுகளை படைப்பதும் இந்துக்களின் வழக்கமாகும். ஆடிப்பிறப்பை கொண்டாடி மகிழ, முதல்நாளே வீடுகளில் தடபுடல் ஏற்படும். **'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே ..'** பள்ளிப்பாடலை நினைக்காதவர் இருக்க முடியாது.

மங்கல காரியங்களுக்காக காத்துக்கிடக்கின்ற இந்த மாதத்தில், மணமுடித்து அனுப்பிவைத்த தமது பெண்ணை தாய் வீட்டார் தம் வீட்டிற்கு அழைத்து வருவர். ஆடி மாதம் முழுவதும் தமது வீட்டில் வைத்திருந்து, ஆவணியில் திருப்பி அனுப்பி வைப்பார்கள். ஆனால் இந்த சம்பிரதாயம் அருகிப்போய், சில சமூகத்தவரிடத்தில் மட்டுமே இருந்து வருகிறது.

## அற்புதமானது ஆடிச்சுவாதி ..

சுவாதி நட்சத்திரத்தின் பெருமையை விளக்குவதும் இந்த ஆடிமாதம்தான். சூரியனைப்போல **18000** மடங்கு விஸ்தீரணம் கொண்டதாம் இந்த சுவாதி நட்சத்திரம் என்று அறியும்போது வியப்பை தாங்கமுடியவில்லை. ஆடி

நட்சத்திரத் தொகுதியில் 15 வது நட்சத்திரம் இது. அதி சக்தி வாய்ந்த பிரகாசத்துடன் விளங்கும் இதன் நிறம் செம்மஞ்சளாம். அதனால் இதனை **சோதி** என்று அழைப்பார்களாம். **''சுத்தமாம் சுவாதி நாள்''** என்று இதனை புகழ்ந்து போற்றிப் பாராட்டிய சான்றோரும் உளர். சுந்தர மூர்த்தி சுவாமிகள் சோதி வடிவம் பெற்று கைலாயம் சென்றது, இந்த சோதி மயமான சுவாதி நாளில்தான் எனும்போது சிலிர்க்கிறது மேனி!

***இருபத்தேழு நட்சத்திரங்களுள் மிகச்சிறந்த இந்த சுவாதி தினத்தில் பெய்கின்ற மழைத்துளி, சிப்பியின் வாயில் விழுந்து முத்தாக வடிவெடுக்கிறதாம்!***

ஒரு வினாடியில் 84 மைல்கள் விரையும் ஆற்றல் கொண்டதாக விளங்குகிறது இந்த சுவாதி நட்சத்திரம். பூமியிலிருந்த 50 ஒளியாண்டு தூரத்தில் இருப்பதால் இதன் நகர்வு இரண்டு அங்குலமாகத்தான் நமது கண்களுக்குத் தோன்றுகிறது. இதன் அருகே சந்திரன் வரும்போதுதான் கடலில் விழும் மழைத்துளிகள் முத்தாக உருவெடுக்கின்றன என்பது ஒரு கவி மரபு.

சுவாதித் திருநாள் என்ற பெயரில் திருவாங்கூரில் ஒரு அரசர்கூட இருந்திருக்கிறார். பெரும் கலைஞராக விளங்கிய இவர் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தபடியால் இப் பெயரை பெற்றார். இன்னும்கூட சொல்லவேண்டுமென்றால், பரவையாரும், சங்கிலியாரும், சேரமான் பெருமாள் நாயனரும் கைலையை அடைந்து ஈசனிடம் இன்புற்றிருந்தது, இதே சுவாதித் திருநாளில்தான்.





## ஆடிக் கிருத்திகை

கிருத்திகை என்பது கார்த்திகை நட்சத்திரத்தின் இன்னொரு பெயர். அஸ்வினி முதற்கொண்ட நட்சத்திரக்கூட்டத்தில் இது மூன்றாவதாகும். பிரகாசமாகத் தோன்றுகின்ற இந்த கூட்டத்தின் எண்ணிக்கை ஏழாகும். ஓரியன் மண்டலத்திற்கு சற்றே வடமேற்கில் அமையும் இக்கூட்டத்தில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளனவாம். ஆனால் நமது சாதாரண கண்களுக்கு ஆறும், கூர்மையான கண்களுக்கு ஏழும் தெரியுமாம். சாதாரணமாக கண்ணுக்குத் தோன்றுகின்ற ஆறு நட்சத்திரங்களைப்பற்றி புராணக்கதையும் உண்டு ..

கலியுகக் கடவுளான முருகப்பெருமான் சரவணப்பொய்கையில் பிறந்தபோது, பாலூட்டி வளர்த்தவர்களே இந்த ஆறு நட்சத்திரங்களும் என்று போற்றப்படுகின்றன. கொடியவரை அழித்து, நல்லவர்களை காக்க குமரவேலன் வெளிக் கொணர்ந்த கருணைக் கூர்முகங்கள் ஆறு ஆகும். கரங்களும் பன்னிரண்டு கொண்டு ஆறு குழந்தைகளாக விளையாடி உலகை மகிழ்வித்தார்.

**''இக் குழந்தைகளுக்கு பாலூட்டி, வளர்த்து வாருங்கள் ..''** என்று ஆறு தெய்வ மாதர்களை அழைத்து திருமால் பணித்தார். அவர்களே கார்த்திகைப் பெண்கள். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட முருகனுக்கு கார்த்திகேயன் என்றும் இதனால் பெயர் வந்தது.

அதனால்தான் கார்த்திகை நாளில் வழிபடு பவர்களுக்கு முருகனின் கருணை அதிகமாகப் பொழிகிறது. தன்னை வளர்த்த கார்த்திகைப் பெண் களிடம் பேரன்பு கொண்டு வரங்களையும் தந்தான் எழில் குமரன் ..

முருகனுக்குறிய விரத நாட்கள் பல இருப்பினும், அவற்றுள் கிழமைகளில் வெள்ளிக் கிழமையும், திதிகளில் சஷ்டி திதியும், நட்சத்திரங்க ளில் கிருத்திகை நட்சத்திரமும் வெகு சிறப்பான வைகளாம் ..





### கிருத்திகை விரதத்தின் மகிமை!

சப்த ரிஷிகளுக்கும் மேலான நிலையை நாரத முனிவர் பெற்றது கிருத்திகை விரதத்தை முறையாகப் பன்னிரண்டு ஆண்டுகள் நோற்றதால்தான்.

பிரம்மச்சாரியாகிய மறையவன் ஒருவன், மனுக்களின் முதல்வனாகப் பிறந்து முழு உலகையும் ஆண்டது இந்த கிருத்திகை விரதத்தால்தான்.

பேறுகள் பல பெற்ற திரிசங்கு சக்கரவர்த்திகூட அந்தணராக இருந்தவர்தான். கிருத்திகை விரதத்தாலேயே விரும்பியவாறு உயர்ந்தார்.

ஒரு அரசனும், வேடனும் கிருத்திகை நாளில் முறையாக வழிபாடு ஆற்றியதால் அந்திமான், சந்திமான் எனும் பெயர்களோடு பிறந்து, பேரரசர்களாக உலகை ஆண்டிருக்கிறார்கள்.

தன் நாடு நகரங்களை இழந்து துன்புற்ற பகீரதன் என்பவன் வனத்திற்கு சென்று, சுகர் என்ற முனிவரிடம் தனது நிலையைக் கூறியபோது, கிருத்திகை விரதத்தைப் பற்றிய உபதேசத்தைப் பெற்றான். விருப்பத்தோடு அதனைக் கடைப்பிடித்துவர பலமும், வரமும் கிட்டியது. பகைவரை வென்று இழந்த நாட்டை மீட்டான். இன்புற்று வாழ்ந்தான்.

கிருத்திகைகள் எல்லா மாதத்திலும் சிறப்பானவையே எனினும், தட்சிணாயம் தொங்கும் ஆடி மாதத்தில் வரும் ஆடிக்கிருத்திகையும், உத்திராயணம் தொடங்கும் தை மாதத்தில் வரும் தை மாதக்கிருத்திகையும் தனிப்பெரும் சிறப்புடையனவாம். இரண்டினுள்ளும் ஆடி மாதக் கிருத்திகை தமிழ்ப்பெரும் கடவுளாகிய வேலனுக்கு வெகுவாக உவகை தருவதாகுமாம் ..

### ஆடிப்பூரம் ஆனந்தம் தருமே ..

அம்பிகையின் சிறப்புத் திருநாள் பூரம் ஆகும். சிவபெருமானுக்கு திருவாதிரையும், மகா விஷ்ணுவுக்கு திருவோணமும்போல அம்மனுக்கு உரியது இந்த பூரம். இத்தினத்தில்தான் அம்பிகை அவதரித்தாள் என்பதும் பெரியோர் வாக்கு.

இருபத்தேழு நட்சத்திரக் கூட்டங்களிலே பதினோராம் நட்சத்திரம் இது. சிம்ம ராசியில் உள்ள இந்த பூர நட்சத்திரத்தில் அம்பிகை அவதாரம் செய்தாள் என்பதை திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், கந்தர் அந்தாதி என்னும் நூலில் கூறியுள்ளார்.

அவர் பாடியிருக்கும் வரிகளில் அம்பாளின் அழகுறு தோறறத்தையும், வீரத்தையும் சாதாரண தமிழில் வர்ணிப்பதானால் அதுவே அளப்பறு உவகையூட்டவல்லது ..



**பூர நாளிலே, கடல் சூழ்ந்த பூவுலகத்தைப் படைத்துத் தருவதற்காக அவதரித்த ஊமாதேவி, தன்னுடைய பாகமாகிய இடக்கரத்தால் ஆமரு மலையாகிய வில்லைப் பிடித்துக் கொள்ளச் செய்து, முப்புரத்தின்மேல் திருமாலாகிய அம்பை எய்யும்பொருட்டு தனது பாகமாகிய வலக்கரத்தால் வாசுகியாகிய நாணைதட தொடுத்த சிலபெருமானின் திருச் செங்கோட்டு மலையை கோயிலாகக் கொண்ட மிக்க சிறப்புடைய மைந்தனே! திருமாலின் மருகனே! திருக்கை என்னும் மீனையுடைய கடலின் கண், அசுரர் ஆகிய பகைவர்களின் இரத்தத்தினால் புதிய உறையாகத் தோயும்படி செய்த வேலாயுதத்தை உடையவனே! என்றெல்லாம் புகழ்ந்து சொல்லி, நெஞ்சே! நீ என்றும், எங்கும் திரிந்து தல யாத்திரை புரிந்து உய்வாயாக!**

என்று பொருள் தரவல்லதாக அவரின் பாட்டு இருக்கும் ..

பூரம் என்பது ஒவ்வொரு மாதத்திலும் வருவதற்குறிய நட்சத்திரம் ஆயினும், ஆடி மாதத்தில் வருகின்ற நட்சத்திரமே மிகவும் சிறப்புடையதாகும்.



**''ஆடிப்பட்டம் தேடி விதை''** என்ற பழமொழியை வழக்காகக்கொண்டு உழவர்கள் இம்மாதத்தில் உழுது, விதை விதைத்து, பயிர் செய்யும் முயற்சிகளை ஆரம்பிப்பர். **''அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம் ..''** என்று சிவஞான சித்தியார் சொன்னபடி உழவர்களின் உழவுத்தொழில் வெற்றி தந்து, அவர்கள் விதைத்த பயிர் செழித்தோங்கி பெரும்பயன் தருமாறு செய்கின்றவள் அம்பாளே! அதனாலும் அவளின் ஆடி மாதத்துப் பூரம் சிறப்புடையதாக போற்றப்படுகிறது. ஸ்ரீதேவி, பூதேவிகளின் அம்சமாகக் கருதப்படும் ஆண்டாள் நாச்சியாரும் ஆடி மாதத்திலேயே அவதரித்து அருளினாள் என்பதும் வரலாறு.

## வியாச பௌர்ணமி ..

சில வேளைகளில் வியாச பௌர்ணமி ஆடி மாதத்திலும் வருவதுண்டு. இதனை சாதுர்மாஸ்ய பூஜை குருபௌர்ணமி என்றும் கூறுவார்கள். மழைக்காலமாகிய நான்கு மாதங்களுக்கு சந்நியாசிகள் வெளியே சஞ்சரிக்க மாட்டார்கள். மழையில் சஞ்சரிக்கும் பிராணிகளுக்கு தமது கால்களால் இம்சை ஏற்படலாகாது என்பதே இதன் நோக்கம். அதனால் இக்காலத்தில் ஒரே இடத்தில் இருந்து வியாச பூஜை செய்து, வேதாந்த விசாரம் செய்யவேண்டும்.

விஸ்வருப யாத்திரை என்ற பௌர்ணமியில் வெளியே புறப்படுவார்கள். வியாச பூஜையன்று ஒவ்வொரு குருவையும் சிஷ்ய மண்டலத்துடன் புது வஸ்திரத்தில் அரிசியை பரப்பி, எலுமிச்சம் பழத்தை ஐந்து ஐந்தாக வைத்து, அதில் 1 குரு, 4 சிஷ்யர் என குரு மண்டலத்தை ஆவாகநம செய்து பூஜிக்கவேண்டும். நாராயணன், பிரம்மா, வசிஷ்டர், சக்தி, பராசார், வியாசர், சுகர், கௌடபாதர், கோவிந்த யோகி, சங்கரர் முதலானவர்களையும், கிருஷ்ணரையும் பூஜிப்பார்கள்.

கிரஹஸ்தர்கள், துறவிகளை ஒரே இடத்தில் வைத்து வேதாந்த விசாரம் செய்வார்கள்.



# நாக பஞ்சமி ..

எம்பெருமான் அநந்தன் என்ற நாகமாக இருந்து பூமியைக் காக்கின்றார். தட்சகன், வாசுகி, கார்கோடகன், முதலிய சர்ப்பங்களும் பாதாள லோகத்தில் அவருக்கு சகாயமாக வசிக்கின்றனர். காசியப்பருக்கு கத்ரு என்பவளிடம் பிறந்தவர் நாகர். தாய் சொல்லைக் கேளாததால், தீயில் வீழ்ந்து அழியும்படி தாயே சபித்தாள். அச் சாபத்தால் பல சர்ப்பங்கள் தீயில் மாண்டன. அஸ்தீகர் ஜநமேஜயனது சர்ப்பயாகத்தை நிறுத்தி சாபத்தை அகற்றினார். அதுவே இந்த பஞ்சமியாம். இவ்வேளையில் நாகத்தைப் பூஜித்தால் நமக்கு நன்மை கிடைக்கிறது. இத்தினங்களில் புற்றுக்கு பால் தெளித்து, பூஜை செய்து வழிபட வேண்டும்.





சர்ப்பதேவதையால் சந்ததி விருத்தி தரமுடியும், தடுக்கவும் முடியும். ஆதலால் நித்திய சந்தியா வந்தனங்களில் பிரார்த்திக்க வேண்டும். சர்ப்பபலி என்ற பூஜை நாற்பது சம்ஸ்காரங்களில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளது. சிராவண பௌர்ணமியில் அதனை ஆரம்பித்து, தை பௌர்ணமியில் முடிக்கவேண்டும். சந்தானம் உண்டாக நாகப் பிரதிஷ்டை செய்தல், நாகப் பிரதிஷ்டை செய்து பிறந்தவருக்கு நாகலிங்கம், நாகராஜன், நாகலட்சுமி என்ற பெயரிடுதல் நாம் காணக்கூடிய ஒன்று.

## ஹயக்கரீவ அவதாரம் ..

இம்மாதத்தில் வரும் பௌர்ணமியும் விஷேசமானது. சகல கலைகளுக்கும் ஆதாரமாக விளங்கும் ஹயக்கரீவர் அவதரித்த தினம் இந்தப் பௌர்ணமியாகும். அன்று அத்தியயனம் செய்யக்கூடாத நாளாயினும், அத்தியயனம் தொடங்குகிறார்கள். ஆனால் வியாசருக்குத்தான் பூஜை என்பதும், இவருக்கு பூஜை இல்லை என்பதும் நியதி.

## ஆடி மாதத் திருத்தொண்டர் திருநாள் ..

| | | |
|---|---|---|
| கார்த்திகை | -- | மூர்த்தி நாயனார் |
| கார்த்திகை | -- | புகழ்ச்சோழ நாயனார் |
| திருவாதிரை | -- | கூற்றுவ நாயனார் |
| சித்திரை | -- | பெருமிழலைக்குறும்ப நாயனார் |
| சுவாதி | -- | சுந்தர மூர்த்திநாயனார் |
| கேட்டை | -- | கலிய நாயனார் |
| கேட்டை | -- | கோட்புலி நாயனார் |

# வரலட்சுமி விரதம்...

**இம்மாதத்தின் அற்புதமான விரதம் இது ..**
**சுமங்கலிகளைத் தேடிக்கொண்டு தெய்வம்**
**இல்லம் புகும் நாள் இது!**



ஒருநாள் வரலட்சுமி அம்மன், சாருமதி என்ற உத்தமப் பெண்ணின் கனவில் தோன்றினாள். ஆடி மாத பௌர்ணமிக்கு முன் வருகின்ற வெள்ளிக்கிழமையில் தன்னைப் பூஜை செய்தால் கேட்கும் வரம் அருள்வதாக கூறினாள்.

சாருமதியும் அம்பிகையின் கட்டளைப்படி வீட்டைச் சுத்தம் செய்து, கோலமிட்டு, தோரணங்கள் கட்டி அலங்கரித்து, வாழை இலையில் அரிசியைப பரப்பி, அதன்மீது கலசம் வைத்து 'வரலட்சுமி வருவாயம்மா ..' எனப் பாடி அன்னையை அழைத்துப் பூஜை செய்தாள்.

மங்கலச்சரடு கட்டிக்கொண்டு, தூப, தீப, நைவேத்தியங்கள் படைத்து தேவியை வழிபட்டுப் புத்திர பாக்கியமும், செல்வச்செழிப்பும் பெற்று அவள் இனிது வாழ்ந்தாளென்று பரமேஸ்வரன் பார்வதி தேவிக்குக் கூறினார். **'' நீயும் இவ்விதம் பூஜை செய்து சௌபாக்கியங்களைப் பெறுவாயாக ..''** என்றும் திருவாய் மலர்ந்தருளினார் எனப் புராணம் கூறுகிறது.

கணவனின் ஆயுள், ஆரோக்கியம், செல்வம் பெருகவும், ஐஸ்வரியங்களோடு கூடிய பெருவாழ்வு வாழவும் மங்கையர்கள் செய்துவருவது இந்த வரலட்சுமி விரதமும், பூஜையுமாகும் ..

**ஒரு பொன் அந்திநேரத்தில் இதே தினத்தில்** மகாலட்சுமி பாற்கடலில் தோன்றினாள் ..

இந்த நாளில் உபவாசம் இருந்து, தூய்மையான அழகுறு மண்டபத்தில் இலட்சுமி தேவியை கலசத்தில் ஆவாகனம் செய்யவேண்டும். ஒன்பது முடியுள்ள நோன்புக் கயிற்றை தரித்தல் வேண்டும்.

மகாலட்சுமியே நேரில் பூவுலகம் வந்து, இந்த விரதத்தை உபதேசித்தாளென்றால் இதன் சிறப்பை வர்ணிக்க வார்த்தையில்லை. இதை விளக்கும் பத்ம புராணங்களை அறிந்தபோது, இவ்விரதத்தை அனுஷ்டித்த மங்கையர்களின் செல்வாக்கும், அனுஷ்டிக்காதவர்களின் துன்பங்களும் தெரிகின்றன ..







# குருப்பெயர்ச்சியின் எதிரொலிகள்!



## மேஷம்




கவர்ச்சி, சிந்தனை, கோபம், வேகம், வெளிப்படையான பேச்சு. இவர்கள்தான் மேஷ ராசிக்காரர்கள். சென்ற வருட வியாழ மாற்றம் இவர்களை நன்றாகவே பாதித்திருக்கும். பல விதங்களிலும் அடிபட்டு நொந்திருப்பர். இப்போது **17.05.2012** இல் நடந்திருக்கும் குருப்பெயர்ச்சி இவர்களுக்கு இதமான ஆறுதலாக இருக்கும். குடும்பச்சிறப்பு, வருமானம் நன்றாக இருக்கும். நல்ல வாய்ப்புகளோடு கடமை உணர்வுகளும் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி, உயர்கல்வி, திருமணம் முதலிய காரியங்களில் முன்னேற்றம் இருக்கும். கடன்கள் வசூலாகும். கொடுத்த வாக்குகளை காப்பாற்றி பெயரெடுப்பீர்கள். ஆண், பெண் இருபாலாருக்கும் திருமண யோகம் கூடிவரும். அடகில் கிடக்கும் நகைகள் வந்துசேரும். தனம் சேர்க்கவும் இடமுண்டு. புதிய வீடு கட்டும் யோகமும், மனைவி வழிச் சொத்துக்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகளும் நிறைய உண்டு. கணவன் மனைவி உறவில் இருந்து வந்த கசப்புகள் நீங்கி, மகிழ்ச்சியாக வாழ்க்கை இருக்கும். வர்த்தகர்களுக்கு சென்ற ஆண்டு நட்டத்தை ஈடு செய்யும் முகமாக இந்த ஆண்டு லாபம் இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சாதகமான இடமாற்றம், சக ஊழியர்களின் அனுசரனை, நன்மதிப்பு உண்டு. வேலைக்காக காத்திருந்தவர்களுக்கு வேலையும் கிடைக்கும். வீட்டுப்பொருட்கள் வாங்குதல், தனிக்குடும்பம், அடகு நகை மீட்டல் ஆகியவற்றால் பெண்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

## ரிஷபம்




ரிஷப ராசிக்காரர்கள் சற்று அவதானமாக கருமமாற்ற வேண்டிய ஆண்டு இது. பொறுப்பை உணர்ந்து தங்களின் கடமைகளை செய்யவேண்டும். முக்கிய துறைகளில் பணிபுரியும் வல்லுனர்கள் தங்கள் கடமைகளை திட்டமிட்டு, நிதானமாக செய்ய வேண்டும். வேலைச் சுமை, விருப்பமில்லாத இடமாற்றங்களால் சிரமங்கள் ஏற்படும். பொறுப்புகள், பிணைகள் போன்றவற்றை தவிர்க்கவும். சுபமான நிகழ்வுகளில் சந்தோஸம் கிடைக்கும். புத்திர பாக்கியம் தள்ளிப்போனவர்களுக்கு இந்த ஆண்டு அந்த பேறு கிட்டும். தடைப்பட்ட திருமணங்கள் நடக்கும். இல்லறத்தில நாட்டம் குறைந்தவர்கள் அதன் மகிழ்ச்சியை அடைவர். பிரிந்தவர் கூடுவர். புரிந்துணர்வும் அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கும் வாய்ப்புகள் பெண்களுக்கு உண்டு. பூர்வீக சொத்துக்கள் தடைகளைத் தாண்டி வந்து சேரும் வாய்ப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு லாபத்தில் முடக்கம் வரநேரிடும். பாக்கிகள் நிலுவையாகவே நிற்கும். கடன் படுவதோடு அலைச்சலும் அதிகரிக்கும். முதலீடு செய்யும்போது நிதானம் தேவை. பேச்சும் குறைய வேண்டும். விவாதங்களைத் தவிர்த்து விட்டுக்கொடுத்துப்போவது நன்று. உத்தியோகஸ்தர்கள் வேலையில் கவனமாக இருக்கவேண்டும். மேலதிகரிகாரிகளை அனுசரித்து நடக்கவும். கவனம் சிதறாமல் நடந்தால் எந்த இழப்பும் நேராது.

## மிதுனம்




மிதுன ராசிக்காரர்களுக்கு வீட்டு மனை, கட்டடங்கள் கட்டும் யோகம் அமையும். இருக்கும் மனையை புதுப்பிக்கவும் இடமுண்டு. தாயின் வழியாக நற்காரிய செலவுகள் ஏற்படும். கடனில் தத்தளித்தவர்களுக்கு அதனை அடைக்கும் தருணம் கிடைக்கும். நாள்பட்ட நோய்கள் குணமாகும். புதிதாக கடன் வாங்கும் நிலைக்கும் சிலபேர் தள்ளப்படுவார்கள். அரச கடன்கள் பெற்று தொழிற்சாலைகள், வீடுகள் கட்டவும் வாய்ப்புகள் உண்டு. ஆயுள் விருத்திக்கும் குருப்பெயர்ச்சி சாதகமாகவே இருக்கிறது. உடல் நிலையில் முன்னேற்றமும், நோய் நிவாரணமும் கிடைக்கும். கண் சம்பந்தப்பட்ட வியாதிகளில் தாயார் சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். ஆனால் நல்ல பலன் கிடைக்கும். வர்த்தகர்கள் வழக்கத்தையும் மீறி அதிகமாக முதலிடவேண்டி வரும். வாகனச் செலவுகளால் செலவுகள் வரும். எதிர்பார்த்த லாபங்களை ஈட்டுவது கடினம். உத்தியோகத்தர்கள் சிலருக்கு தேக ஆரோக்கியம் கெடும். அதிகாரிகளோடு பிணக்குகள் ஏற்படும். லீவுகள் அதிகமாக போடும் சந்தர்ப்பங்களும் வரலாம். வேலை நிமித்தம் தூர இடங்களுக்கு பிரயாணங்கள் மேற்கொள்ளவேண்டியும் பலருக்கு வரலாம். பொதுவான கணிப்பின்படி நல்ல திசை அறிவோடு செயலாற்றினால், கஸ்டங்களை இலகுவாக்கலாம்.



## கடகம்

குருப்பெயர்ச்சியினால் நன்மை அடையப்போகும் ராசிக்காரர்களுள் இந்த கடக ராசிக்காரர்களும் அடங்குவர். இந்த ஆண்டு குருவால் காப்பாற்றப்படுபவர்களாக இருப்பார்கள். இதுவரையில் எத்தனையோ விடயங்களில் உழைப்பிற்கேற்ற பலனை அனுபவிக்காமலும் விட்டுக்கொடுத்தும் தங்களை சுருக்கிக்கொண்டவர்கள் இவர்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் சேர்த்து இந்த ஆண்டு பலன்களை அள்ளுவீர்கள். உங்கள் இதுவரையான முயற்சிகளின் விளைவுகள் உங்களை உயர்த்தப் போகிறது எனலாம். பாராட்டு, பதவி, கடன் பாக்கி வசூல் எல்லாமே உண்டு. சகோதரர்களின் ஜனன ஜாதகம் சிலவேளைகளில் உங்களுக்கு பொருந்தாமல் போக இடமுண்டு. அதனால் அவர்கள் விஷயத்தில் கவனம் தேவை. சத்துருவாகவும் அவர்கள் உங்களுக்கெதிராக செயல்படலாம். பத்திர பாக்கியம் தாமதித்தவர்களுக்கு அது கிடைக்கும் ஆண்டாகவும் இது இருக்கும். புண்ணிய தல யாத்திரைகளும், குலதெய்வ வழிபாடுகளும் கிடைக்கும். தந்தை வழி சொத்துகள் கிடைக்கவும் வாய்ப்பு வரும். தடைப்பட்டு வருகின்ற திருமணம் இருபாலார்க்கும் இந்த ஆண்டு நடக்கும். அடகில் கிடக்கும் பொன் பொருள்கள் வீட்டிற்கு வந்து சேரும். வர்த்தகர்களுக்கு யோகமான வியாபார சந்தர்ப்பங்களுண்டு. நீதி மன்ற பிணக்குகள் தீர்ந்து, நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் விரும்பிய இடமாற்றம் பெறுவார்கள். பதவி உயர்வுகளும் உண்டு. இதுவரையில் வேலையற்றிருப்போர்களுக்கு வேலையும் கிடைக்கும்.




## சிம்மம்

பராக்கிரமம் மிக்க சிம்ம ராசிக்காரர்களுக்கு உகந்ததாக குருப்பெயர்ச்சி அமைகிறது. பணக்கஷ்டம் நீங்கும். வட்டிகளிலிருந்து மீட்சியும், அனுகூலங்களும் கிடைக்கும். தொழிலும், குடும்ப வாழ்வும், சொந்த ஊர் வாசமும் மகிழ்ச்சியை தரும். வீடு கட்டும் முயற்சியுடையோருக்கு வெற்றி அமையும். கடன்கள் அடைபடும். சில உடமைகள் ஏற்கனவே களவு போயிருந்தாலும், அவை மீண்டும் கிடைப்பதற்கு சந்தர்ப்பமுண்டு. புதிய வீடு கட்டுபவர்கள் கிரகப்பிரவேசம் செய்வார்கள். நீதிமன்ற வழக்குகளில் பிரச்சிகைள் தீரும். தீர யோசித்தே எந்த முடிவையும் எடுப்பது இந்த குருப்பெயர்ச்சிக்கு நல்லது. வர்த்தகர்கள் சுமுகமாக தமது வியாபாரத்தை நடத்துவார்கள். வர வேண்டிய பாக்கிகள் வருவது நாளெடுக்கும். நீங்கள் கடன் பட்டவர்களிடம் கெடுபிடிகள் இருக்கும். கடன், உடல் வருத்தம், மனநிலை இவற்றில் ஏதாவது ஒன்று உங்களை பாதிக்கும். புதிதாக முயற்சிகளை தற்போது மேற்கொள்ளாமல், செய்து வரும் தொழிலில் கவனம் செலுத்தவும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழக வேண்டும். எதிலும் சிந்தித்து செயல்பட வேண்டும். இல்லையேல் கோபம் உங்களிடமிருந்து நண்பர்களைப் பிரித்துவிடும். பேச்சில் மிகுந்த அவதானம் தேவை.




## கன்னி

மகா விஷ்ணுவின் அனுக்கிரகம் பெற்றவர்கள் இந்த கன்னி ராசிக்குறியவர்கள். கடந்த கால பின்னடைவுகளைப் போக்கி இவர்களின் இன்னல்களை இந்த ஆண்டு தீர்ப்பார் குரு பகவான். விருப்பங்களை நிறைவேற்றித்தந்து ஆறுதலளிப்பார். தேடித்திரிந்த நன்மைகள் யாவும் இனி இவர்களைத் தேடி வரும். இத்தனை கால வழிபாடுகளும், பூஜைகளும், விரதங்களும் இனிமேல்தான் பூரணமான பலன்களைக் கொட்டப் போகின்றன. உங்களை கேலி பேசியவர்கள் எல்லோருமே உங்களின் வளர்ச்சியைக் கண்டு வியப்பார்கள். மதிப்பும், செல்வாக்கும் அந்தளவுக்கு ஏற்றம் பெறும். நீங்கள் கஷ்டத்தில் இருந்தபோது விலகிச்சென்றவர்கள் இனி தாமாகவே வந்து இணைவார்கள். பெருமை தரக்கூடிய காரியங்களை பிள்ளைகள் செய்வார்கள். நெடுநாள் கனவுகள் நிறைவேறும். நிலம், சொத்துக்களால் கிடைக்காமல் இருந்த நன்மைகள் இனி கிடைக்கும். வீடு, மனை கட்ட சந்தர்ப்பம் கிட்டும். வர்த்தகர்களுக்கு இனி வரும் நாட்கள் லாபமுள்ளதாக இருக்கும். அடைக்காமல் இருந்த வங்கிக்கடன்களை அடைத்து, புதிய கடன்கள் பெற்று தொழிலை அபிவிருத்தி செய்வீர்கள். வாடிக்கையாளர் உறவு நன்றாக இருக்கும். பாக்கிகள் வசூலாகும்.உத்தியோகத்தர்கள் பதவி உயர்வும், சம்பள உயர்வும் பெறுவார்கள். சிலர் வெளி நாடுகளும் செல்வார்கள். விரும்பிய இடமாற்றமும், மதிப்பும், செல்வாக்கும் கிடைக்கும்.





## துலாம்




இப்போது குரு பகவான் மாறிச்செல்லும் இடம் இந்த ராசிக்காரர்களுக்கு அதிக அனுகூலங்களை தர வாய்ப்பு குறைவு எனலாம். இறை வழிபாட்டில் அதிக நாட்டத்தை ஏற்படுத்துவதன் மூலமாக கிரக இன்னல்களை சுலபமாக தவிர்க்கலாம். எந்த கஷ்டத்திலும் செய்யும் கருமத்தில் கவனத்துடன் இருந்தால் நன்மையை வென்றெடுக்கலாம். கடந்த வருடத்தில் குரு உங்களுக்கு அனேக சாதக வழிகளைத் திறந்துவிட்டார். மதிப்பு மரியாதைகளோடு எடுத்த காரியங்களில் வெற்றியும் கிடைத்து வந்தது. அதே குரு பகவான் இம்முறை விரயத்தையும், செலவுகளையும் தந்தாலும் வருமானத்திற்கும் வழி செய்கிறார். எந்த கிரகத்திலும் நன்மை, தீமை இரண்டும் கலந்தே இருக்கிறது. வள்ளலாகிய குரு பொதுவாகவே யாருக்கும் தீங்கு செய்யாதவர். அவருடைய பார்வையின் பலன் துன்பத்தைக் கடந்த நன்மையையே பெரும்பாலும் தருகிறது. வர்த்தகர்களுக்கு தொழில் சார்ந்த போட்டிகள் இருக்கும். வியாபாரத்தில் ஒற்றுமை குறையும். வாகனங்கள் திருத்தச் செலவுகளை ஏற்படுத்தும். முதலீடுகளில் மற்றவரை நம்பி மோசமும் போகலாம். எதிலும் சூழ்நிலையை அறிந்து திட்டமிட்டால் நட்டங்களைத் தவிர்க்கலாம். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுதல் உத்தமம். யாருக்கும் பிணை நிற்க வேண்டாம். உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உள்ளாகலாம். மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகலாம். மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்கவும் நேரிடலாம்.

## விருச்சிகம்




எதையும் தாங்கும் இதயம் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களுக்கு வருங்காலம் நல்ல காலமே. ஏனெனில் எத்தனையோ பிரச்சினைகளையும், மன உளைச்சல்களையும் குரு பகவான் கடந்த நாட்களில் தந்துவிட்டார். அது அவரின் விருப்பமல்ல. வீடு மாறியதில் ஏற்பட்ட பார்வையே காரணம். குரு பார்த்தால் கோடி குற்றங்களும் நீங்கும் என்பார்கள். அது போல இப்போது அவரின் பார்வை இந்த ராசிக்காரர்கள்மேல் சாதகமாக விழத் தொடங்குகிறது. இழந்தவைகளை மீண்டும் பெறவும், அறிந்தும் அறியாமலும் செய்த குற்றங்கள் நீங்கவும் இவ்வருடம் வாய்ப்புகள் வரும். கடந்த காலத்தில் சிலருக்கு கடனும், சிலருக்கு எதிரிகளும், சிலருக்கு நோயும் என்று எத்தனையோ பிரச்சினைகள் தோன்றின. தொழில் துறையில் போட்டி பொறாமைகளும் தேவையில்லாத பாதிப்புகளும் வந்தன. இப்போது அந்த நிலை மாறும். மதிப்பும், செல்வாக்கும் உயரும். எந்த பொறுப்பையும் ஏற்று நடத்தும் திறமை அதிகரிக்கும். பொதுத் தொண்டு, அரசியல் என்று அந்தஸ்து பெருகும். ஒரு காலத்தில் புறந்தள்ளியவர்களுக்கு உங்களின் அருமை புரிய வரும். வர்த்தகர்களுக்கு இருந்து வந்த தொழில் முடக்கம் நீங்கி, குருவின் பார்வையால் அமோக லாபம் உண்டாகும். தொழிலில் நம்பிக்கை பெருகும். கடந்த காலத்தைப்போல யாரையும் நம்ப வேண்டாம். உத்தியோகத்தர்கள் விரும்பிய இட மாற்றம் பெறுவார்கள். வரும்படிகளில் இருந்துவந்த குழப்பங்கள் நீங்கும். விருப்பம்போல நடக்கலாம்.

## தனுசு




கம்பீரமும், சிந்தனை ஆற்றலும் கொண்ட தனுசு ராசிக்காரர்கள் தொழில் துறையில் அதிக முன்னேற்றத்தை அடைவார்கள். பிள்ளைகளின் நற்காரியங்களை சிறப்பாக மேற்கொள்வார்கள். இதன்பொருட்டு கடன்படவேண்டி வரினும் அது தற்காலிகமானதே. தொழிலை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு அரச கடன்கள் பெறவேண்டியும் சிலருக்கு சந்தர்ப்பம் வரும். இந்த ஆண்டு படிப்பை முடிக்கும் மாணவர்களுக்கு நல்ல வேலைகள் , அல்லது வெளிநாட்டு பயணம் கிடைக்கும். வீட்டில் சுப காரியங்களால் செலவுகள் அதிகரித்தாலும் அதனால் எந்த இன்னல்களும் நேராது. சிறிய தடங்கள்கள் வரினும், நல்ல யோக பலனையே குரு தருவார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை எனலாம். வியாபாரிகளுக்கு தொழிலில் போட்டி இருக்கும். வரவேண்டிய பாக்கிகள் வர தாமதமாகும். புதிய தொழிலுக்கு கட்டடங்கள் கட்டவும், வியாபாரம் தொடங்கவும் வாய்ப்பு உண்டு. இதுவரை சரியான ஸ்தானம் கிடைக்காத உத்தியோகத்தர்கள் இனி நல்ல வேலையில் அமர்வார்கள். புதிய வேலை வாய்ப்புகளும் கைகூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். அலுவலகத்தில் முன் கோபத்திற்கு இடமளிக்காமல் இருப்பது முக்கியம்.



## மகரம்

தனிமையில் இனிமையும், குடும்பத்தில் பாசமும் கொண்ட மகர ராசி நேயர்களுக்கு இந்த வியாழ மாற்றம் சிறப்பானதாக இருக்கிறது. இந்த குருப்பெயர்ச்சியின் மூலம் ஐந்து ராசிக்காரர்களே அதிக யோகத்தை அடையவுள்ளனர். அவர்களில் இந்த மகர ராசிக்காரரும் அடங்குகிறார்கள். திருமணம் ஆகி பல வருடங்கள் கழிந்தும் வாரிசு இன்றித் தவிப்பவர்களுக்கு வாரிசுகள் கிடைக்கும். திருமண வயதில் காத்திருக்கும் இரு பாலார்க்கும் திருமணம் நிறைவேறும். படித்த பிள்ளைகளுக்கு தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் தரம் உயர்ந்த நிலையை அடையும். திருமணத்தில் இணைந்த தம்பதிகளின் கருத்து வேறுபாடுகள் நீங்கி மன நிறைவோடு வாழ்வர். சொத்துக்களால் ஏற்பட்டிருந்த தடைகள் விலகி அவற்றை அனுபவிக்கும் சநத்ர்ப்பம் உருவாகும். தெய்வ அருளும், குருப்பார்வையும் சகல பாக்கியங்களுக்கும் வழி வகுக்கும். நீண்ட காலமாக நடந்த வழக்குகள் முடிவுக்கு வந்து நல்ல தீர்ப்பு கிடைக்கும். கடந்த காலங்களில் தொழில் சிறந்திருந்தும் சேமிக்க முடியாதவர்கள் இனி நல்ல சேமிப்போடும், கடன்களை தவிர்த்தும் வாழலாம். வியாபாரிகளுக்கு தொழிலில் இருந்த பழைய தடைகள் நீங்கி புதிய பொலிவோடு வர்த்தகம் செய்யலாம். லாபம் பெருகும். புதிய வீடு கட்ட, இடம் வாங்க சந்தர்ப்பம் கிட்டும். நீண்ட காலமாக காத்திருந்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். ஊதிய உயர்வு, பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.




## கும்பம்

உதவிகள் செய்வதும், யுக்திகளோடு கூடிய வெற்றிகளைக் குவிப்பதும் இந்த கும்ப ராசிக்காரர்களுக்கு கைவந்த கலை. தொழில் நிலையைப் பொறுத்ததாக அமைகிறது, இவர்களுக்கான குருப்பெயர்ச்சி. கடந்த காலத்தில் ஏற்பட்டுவந்த தொழில் கஷ்டங்கள் நீங்கி, புதிய தொழில் கிட்டும். ஏற்கனவே தொழிலில் இருந்தவர்களுக்கு அதிக லாபத்தோடு கூடியதாக தொழில் அமையும். கடந்தமுறை ஏற்பட்டுவந்த நட்டங்களை ஈடு செய்யுமுகமாக லாபங்கள் அமையும். தகுந்த வேலை கிடைக்காமலிருந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். நோய் நொடியால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் தகுந்த சிகிச்சையின் மூலமாக குணமடைவர். ஆயுள் விருத்தியும் பலம் பெறும். பிள்ளைகளுக்கு திருமண சடங்குகள் நடைபெறும். வாகனம் வாங்கும் யோகத்தோடு, கையில் இருக்கும் ஆதனத்தை அதிக லாபத்தோடு விற்கவும் நாள் வரும். குரு பார்த்தால் கோடி புண்ணியம் என்பதற்கிணங்க எல்லா நன்மைகளையும் தருவார். வர்த்தகர்களுக்கு தொழிலில் முடக்கம் வந்தாலும் குருவருளால் விலகி விடும். ஆயினும், அதிக கவனம் தேவை. பிறரை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். நேரடி கண்காணிப்பே சிறந்தது. எந்த துறையிலும் முதலீடு செய்யவேண்டாம். உத்தியோகத்தர்களுக்கு கடும் வேலை இருக்கும். திடீர் இடமாற்றமும் வரும். மேலதிகாரிகளின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்வது நல்லது.




## மீனம்

மத சாஸ்திரங்களில் நம்பிக்கையும், சமய காரியங்களில் விருப்பமும் கொண்ட மீன ராசிக்காரர்களுக்கு இது சிறப்பான குருப்பெயர்ச்சியாக இருக்காது. ஏமாற்றத்தையும், மனத்தளர்வையும் தருவார். கடன்பட்டு தேவைகளை சமாளிக்க வேண்டிய நிலையும், பொருளாதாரத்தில் வீழ்ச்சியும் ஏற்படும். நிலங்கள் விடயத்தில் அதிக முன்னெச்சரிக்கை வேண்டும். சுப காரியங்கள் சுமுகமாக நிறைவேறுவதில் தடைகள் வரலாம். தாமதங்களும் ஏற்படலாம். முக்கிய ஸ்தானங்களில் இருக்கின்றவர்களிடம் சாதகமாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம். நிதி நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் எந்நேரமும் விழிப்போடு பணியாற்ற வேண்டும். தந்தையின் வழியில் பொருளுதவி கிடைக்க வாய்ப்புண்டு. வேலையில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வு பெற்று சுயமாக தொழில் தொடங்க முடிவெடுப்பர். உடன் பிறந்தோர்களின் வீடு, சொத்துப் பிரச்சினைகள் தீரும். இறை வழிபாடு, ஆன்மீக ஈடுபாடு பிரச்சினைகளை எதிர்கொள்ள உதவியாக இருக்கும். குல தெய்வ வழிபாடு நன்மைகளை கொண்டுவரும். குருப்பெயர்ச்சியில் ஏற்படுகின்ற பரிபூரண நன்மைகள் கிடைக்காமல் போகாது. ஒரு கிரகம் நன்மையும் செய்யும். தீங்கும் விளைவிக்கும். வியாபாரிகள் தொழிலில் அதிகமாக முதலிடுவதை தள்ளிப்போடவும். பொருட்களை அதிகமாக கையிருப்பில் வைத்திருக்கவேண்டாம். உத்தியோகத்தர்கள் திடீர் இடமாற்றங்களால் அமைதி இழக்கலாம். சக ஊழியர்களின் கபட வேலைகளால் மேலதிகாரிகளோடு இருக்கின்ற நல்லுறவு பாதிக்கப்பார்க்கும். எந்த விஷயத்திலும் நிதானமாகவும், எச்சரிக்கையாகவும் இருந்தால் பாதிப்பு இருக்காது. நன்மைகளை வென்றெடுப்பதில் சந்தேகமும் இருக்காது.



# சமயச் செய்திகள் ..



## மாலை நேர வகுப்புகள்! கலாநிதி மனோகர குருக்கள் நற்பணி மன்றத்தால் ..

மன்னார், வட்டக்கண்டல் சூழ உள்ள நான்கு கிராமங்களின் மாணவர்கள் நலன் கருதி, விஷேட வகுப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மாலை நேரங்களில் நடைபெற இருக்கின்ற இந்த வகுப்புகள், வசதியற்ற கிராமச் சூழ்நிலையில், சிறுவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வரிய ஒழுங்கமைப்பை **கலாநிதி மனோகர குருக்கள் நற்பணி மன்றம்** ஏற்படுத்தியிருப்பது குறித்து மக்கள் பெரிதும் மகிழ்ந்துள்ளனர். ஆறாம் ஆண்டு வரையிலான மாணவர்களின் கல்வித்தரம் உயரவும், மேல்நிலை வகுப்புகளுக்கு அவர்களைத் தயார் படுத்தவும் இந்த மாலைநேர வகுப்புகள் பெருமளவில் கைகொடுக்கும். கடந்த **05.06.2012** அன்று பிற்பகல் **3.00** மணிக்கு, வட்டக்கண்டல் பொது மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந் நிகழ்வில் மாணவர்களும், பெற்றோர்களும் பெருமளவில் நிறைந்திருந்தனர். இச் வேவையினை சிரமேற்கொண்டு **பிரம்மஸ்ரீ ஐங்கர சர்மா, பிரம்மஸ்ரீ தர்மகுமார சர்மா, பிரம்மஸ்ரீ பாபு சர்மா** ஆகியோர் அங்குரார்ப்பணம் செய்ய, பொது மக்கள் சகிதம் நிர்வாக சபை உறுப்பினர் **திரு. ஹேமச்சந்திரனும்** உடனிருந்தார். பாட உபகரணங்களும் வழங்கி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இத் தொண்டினால் கிராமப்புறச் சிறார்களின் கல்விநிலை நிச்சயமாக உயரும்.



## பக்தி ததும்பிய சம்பந்தர் குருபூஜை!

மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியப் பாடசாலையில் இம்முறை பக்தி சொட்ட நடந்தேறிய திருஞான சம்பந்தர் குருபூஜையானது அற்புதமாக இருந்தது. பூரண கும்பம், வாழை, மாவிலைத் தோரணங்களோடு அதிகாலையிலேயே பூஜைக்கான ஏற்பாடுகளில் பாடசாலை வளாகம் சுறுசுறுப்பாகிவிட , கமகமக்கும் வாசனைப்புகை சூழ, சந்தனம் திருநீறு ஏந்திவாறு வரவேற்றனர் மாணவர்கள். குருபூஜைப் பக்தியை அனுபவிக்க மண்டபம் ஆயத்தமாகிவடவே, சரியாக **7.45** மணிக்கு நிகழ்வு தொடங்கியது. பூஜைகளிலேயே அதிசிறந்தது குருவை ஆராதித்தலே. அதிலும், சமயக்குரவருள் நால்வரோ சற்று அதிகமான இடத்தை இந்துவின் மனதில் பிடித்துக்கொண்டு வாழ்பவர்கள். அவர்களிலும் முதல் வரிசை இடம்கொண்ட சம்பந்தராம், உலகத் தாயேந்திப் பாலூட்டிய பாலகன்! அவருக்குப் பூஜையெனில் அதைவிட மகிழ்வேது என்பதுபோல் மகிழ்ந்து துதித்தன உள்ளங்கள். நேர்த்தியான தீப., தூப, மலரார்ச்சனைகள் சகிதம் வழிபட்டு, தமது மனங்களில் ஆலுடைப்பிள்ளையாரை நிறையவே அள்ளிக்கொண்டார்கள். அச்சொட்டான மந்திரங்களும், அந்தணர்கள் பிரசன்னமும், சிந்தையைக் கவர்ந்த சிறப்புரைகளும், களிதந்த பண்ணிசையும், நடனங்களும் .. , அடடா! அது நம் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு மட்டுமே கைவசமாகிவிட்ட காலதேவனின் வரம்!! ஒருபுறம் சம்பந்தரும், மறுபுறம் குருபக்தியும் ஒரே இடத்தில் சங்கமிக்கவல்ல இந்த ஆன்மீகத் தருணம், அதிபர் திரு தயானந்தராஜா அவர்களின் தலைமையில் ஏற்பட்டது என்பது மற்றோர் சிறப்பு.



# புராண காலத்தில் நடந்திருக்கலாம்..

குருவே!
துருபதனும் துரோணரும் போல,
கண்ணனும் குசேலரும் போல
இல்லாமல் இந்த குருகுலத்தில் நான்
மட்டுமே பயில்வதால்,
பிரச்சினையுமில்லை!



ஹேமநாதர் மிகச்சிறந்த ஹிந்துஸ்தான் சங்கீத மேதை. பாணபத்திரர் பக்தி கீர்த்தனங்களில் வல்லவர். இருவரையும் ஒரே மேடையில் ரசிக்க மதுரை மன்னன் தவறிவிட்டான் என்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?



துர்வாச முனிவரை சேவித்ததனால், குந்திதேவி வரம் பெற்றாள். அதே முனிவரை அலட்சியம் செய்து சகுந்தலை சாபம் பெற்றாள். நான் சத்தியவதி .. வெறும் ஓடக்காரப் பெண்தான் !..



நான்தான் அப்போதே சொன்னேனே! இந்தக் கற்கோட்டைகளால் பயனில்லை என்று .. ஆபத்திலிருந்து தூக்கிச்செல்ல இயலாது. விஸ்வ கர்மாவை அழைத்துவா!



அறியாமல் வழி மறிக்கிறாய்! அஞ்ஞான வாசம் புரிகின்ற பாண்டவர்கள் பாஞ்சால தேசத்தில் வசிக்கிறார்கள் என்ற செய்தியை துரியோதனனிடம் கூறவேண்டும்!

ஆரோக்கிய வாழ்வு

# நலம் தரும் யோகா

## தொடர் -- 03

**யோகாசன விதிமுறையின்படி ஒவ்வொரு ஆசனங்களுக்கும் மாற்று ஆசனங்கள் கண்டிப்பாக செய்தாக வேண்டும். அவற்றை இம்மாதம் கவனிப்போம் ..**

கலாசனம், விபரிதகரணி, சர்வாங்காசனம் இவற்றில் எது செய்தாலும் மறக்காமல் மத்தியாசனம், அல்லது சுப்த வஜிராசனம் செய்யவேண்டும்.

சிரசாசனம் செய்தால் மாற்று ஆசனம் நின்ற பாதாசனமாகும். இரண்டு பக்கமும் முன் பக்கமாக வளைக்கவேண்டிய பயிற்சி இது. உதாரணம் :

பாதகஸ்தாசனம் அல்லது, பச்சிமோத்தாசனம் அல்லது, யோக முத்திரா போன்ற ஆசனங்களுக்கு கண்டிப்பாக பின்பக்கமாக வளையக்கூடிய தனுராசனம், உசர்ட்டாசனம், பிறை ஆசனம் போன்ற ஆசனங்களை தவறாமல் செய்தாகவேண்டும்.

யோகாசனங்களை கற்பவர்கள், ஆரம்பத்தில் சூரிய நமஸ்காரம் செய்தபின் மற்றைய ஆசனங்களைச் செய்யலாம். சூரிய நமஸ்காரம் செய்யாதவர்கள் கைகளை முன்னும், பின்னுமாக சுழற்றி உடலை சுறுசுறுப்பாக்கிக்கொண்டு, பயிற்சிகளை ஆரம்பிக்கவும். முக்கியமாக ஒவ்வொரு ஆசனத்தின் இடையிலும் இரண்டு மூச்சு விட்டு எடுக்கவும்.



### *03. உட்கட்டாசனம்*

**செய்யும் முறை :**

நேராக நின்றுகொண்டு, ஒரு அடி அகல இடைவெளியில் கால்களை வைத்துக்கொள்ளவும். கைகளை முன்னோக்கி நேராக நீட்டிக்கொள்ளவும். உடல் தளர்வாக விடவேண்டும். முழங்கால் மடங்கி பாதி அளவு உட்கார்ந்த நிலையில் நிற்கவும். இந்த நிலையில் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு நேரம் நிற்கவும். கால் மூட்டில் வலிக்க ஆரம்பித்ததும் மெதுவாக அப்படியே அமரவும்.



***இதன் பயன்கள் :***

ஆசனங்களின் ஆரம்ப நிலையான இந்த உட்கட்டாசனத்தை செய்வதால், உடலில் உள்ள நாடி நரம்புகள் இறுக்கம் தளர்ந்து இலகு நிலைக்கு வரும். அடிவயிறு, தொடைப்பகுதி, பிருடபாகம் ஆகியன தளர்ந்து கொடுக்கும். பிற ஆசனங்கள் செய்வதற்கான உடல் தகுதி ஏற்படும். கால் மூட்டு வீக்கம், நீர்த்தேக்கம், வலி. உளைச்சல் வாதம் என்பன தீரும். ஐந்தே நிமிடங்கள் இந்த ஆசனம் செய்தால், ஐந்து மைல்கள் நடந்த பயன் கிடைக்கும்.



**ஐந்தே நிமிடங்களில் ஐந்து மைல் தூரம் நடந்த பலன் கிடைக்கிறது!**
**அதுவும் வீட்டிலேயே!!**

இதைத் தொடர்ந்து அமரும்போது பத்மாசனத்தில் ஓய்வெடுப்பீர்கள். பத்மாசனம் செய்யும் முறையை ஏற்கனவே சென்ற இதழில் பார்த்தீர்கள். அதைத்தொடர்ந்து யோக முத்திரப் பயிற்சிக்கு இப்போது நீங்கள் ஆயத்தமாகலாம் ..

## 04 யோக முத்திரா

ஏற்கனவே பத்மாசனம் போடக்கூடியவராகிய நீங்கள் அப்படியே அதில் அமர்ந்திருக்கவும். பின் அதே நிலையில் சுவாசத்தை உள்ளே இழுத்து வைத்துக்கொண்டு, மெதுவாக வெளியே விட்ட நிலையில் தலையை முன்னோக்கி கீழே கொண்டு வரவும். பத்மாசனம் போட முடியாதவர்கள் சாதாரண நிலையிலேனும் அமர்ந்து இதைச்செய்யவும்.

**இதன்பயன்கள் :**

முதுகின் தசை எலும்புகள், வயிற்று உறுப்புகள் பலம் பெறும். மலச்சிக்கல் தீரும். பலக்குறைவு, நீரழிவு நோய், நுரையீரல் வியாதிகள் தீரும். வயிறு குறையும்

அடுத்த பயிற்சியாக உத்தீத பத்மாசனத்திற்கு இப்போது நீங்கள் தயாராகலாம் ..

## 05. உத்தீத பத்மாசனம் ..

**செய்யும் முறை :**

இந்த ஆசனத்திற்கு கண்டிப்பாக பத்மாசனம் பழகவே வேண்டும். அப்போதுதான் இதை இலகுவாக செய்யலாம். கைகளைத் தரையில் ஊன்றியவாறு முழு உடலையும் அந்தரத்தில் தூக்குவதே இந்த ஆசனம். கைப்புயங்களுக்கு இந்த பயிற்சி பலம் தருவதால், கால்களை நீட்டியாவது இதைச் செய்யவேண்டும். பின்னர் பத்மாசனம் கைவசமானதும் முறைப்படி செய்யலாம்.

**இதன் பயன்கள் :**

தோளும், புயமும் பலம் பெறும். ஜீரண உறுப்புகள் இயக்கப்பட்டு, நன்கு செயல்படும். அஜீரணம், மலச்சிக்கல் என்பன தீரும். நெஞ்சுக்கூடு விரிவடைவதால், ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் சுகமடைவார்கள். நெஞ்சு வருத்தம் நீங்கும். புஜ பலம் அதிகரிக்கும். மாதவிடாயின்போது ஏற்படும் வலி நீங்கும்.

**நன்றி : அஷ்டாங்க யோகி,**
**நா. குலசிங்கம்**

**( பயிற்சிகள் தொடர்ந்து வரும் )**





# ஸ்ரீமத் பகவத்கீதை 03

## -- பாரதியார் உரை --

தொகுத்து, தொடராக தருபவர் : வை. திருச்செல்வம்



அங்கனமே மாமன்மாரும், நண்பர்களும், உறவினரெல்லாம் இரண்டு படைகளிலும் நிற்பதைக் கண்டு, குந்தி மகனாகிய அப் பார்த்தன் 27

மிகவும் இரக்கமுற்றவனாய்த் துயருடன் சொல்லுகிறான் :-

''கண்ணா, போர் செய்யவேண்டி இங்கு திரண்டு நிற்கும் சுற்றத்தார்களைக்கண்டு, 28

என் அவயங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. என்னுடம்பு நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது. 29

காண்டீபம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்போ எரிகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனமோ சுழல்கிறது 30

கேசவா, விபரீதமான சகுனங்கள் பல காண்கிறேன். போரிலே சுற்றத்தார்கள் மடிவதில் எனக்கு நன்மை தோன்றவில்லை. 31

கண்ணா, நான் வெற்றியை விரும்பிலேன், ராஜ்யத்தையும், இன்பங்களையும் வேண்டிலேன், கோவிந்தா, நமக்கு ராஜ்யத்தால் ஆவதென்ன? இன்பங்களால் ஆவதென்ன? உயிர் வாழ்வதால் ஆவதென்ன? 32

யாவர் பொருட்டு நாம் ராஜ்யத்தையும், போகங்களையும், இன்பங்களையும் விரும்புகிறோமோ, அவர்கள் உயிரையும், செல்வங்களையும் துறந்தோராய் இங்கு வந்து நிற்கிறார்கள்33

குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதுலரும், மாமன்மாரும், பேரரும், மைத்துனரும், சம்பந்திகளும் (இங்குளர்) 34

மதுசூதனா, யான் கொல்லப்படினும் இவர்களைக் கொல்ல விரும்பேன். மூவுலகின் ஆட்சி பெறுவதற்கெனினும் (இது செய்யேன்) பூமியின் பொருட்டு செய்வேனா? 35

ஜனார்த்தனா, திருதராஷ்டிரக் கூட்டத்தாரைக் கொன்று நாம் என்ன இன்பத்தை அடையப்போகிறோம்? இந்தப் பாதகரைக் கொல்வதால் நம்மைப் பாவமே சாரும். 36

ஆதலால், சுற்றத்தார்களாகிய திருதராஷ்டிர வர்க்கத்தாரைக் கொல்வது நமக்கு தகாது. மாதவா, பந்துக்களைக் கொன்றபின் நாம் இன்புற்றிருப்பதெப்படி? 37

அவாவின் மிகுதியால் அறிவிழந்த இவர்கள் குலத்தையழிப்பதில் விளையும் தீங்கையும், நண்பருக்கு சதி செய்வதிலுள்ள பாதகத்தையும் காண்கிலராயினும், 38

**''மதுசூதனா, பீஷ்மரையும், துரோணரையும் என் அம்புகளால் எப்படி எதிர்ப்பேன்? தொழுதற்குறிய பெரியோரன்றோ ..!**



ஜனார்த்தனா, குல நாசத்தால் ஏற்படுங் குற்றத்தையுணர்ந்த நாம், இப்பாவத்தினின்று விலகும் வழியறியா திருப்பதென்னே? 39

குல நாசத்தால் என்றுமுள்ள தர்மங்கள் அழிகின்றன. தர்மம் அழிவதனால் குலமுழுதையும் அதர்மம் சூழ்கிறதன்றோ? 40

கண்ணா, அதர்மம் சூழ்வதனால் குல ஸ்திரீகள் கெட்டுப்போகிறார்கள். விருஷ்ணி குலத் தோன்றலே, மாதர் கெடுவதனால் வர்ணக் குழப்பமுண்டாகிறது. 41

அக்குழப்பத்தால் குலத்தார்க்கும், அதனை அழித்தார்க்கும் நரகமேற்படுகிறது. இவர்களுடைய பிதுர்கள் பிண்டமும், நீருமின்றி வீழ்ச்சி பெறுகிறார்கள். 42

வர்ணக்குழப்பமுண்டாகும்படி குலக்கேடர் செய்யும் இக்குற்றங்களால் ஜாதி தர்மங்களும், தொன்று தொட்டுள்ள குலதர்மங்களும் எடுபட்டுப்போகின்றன. 43

ஜனார்த்தனா, குலதர்மங்கள் எடுபட்டுப்போன மனிதருக்கு எக்காலும் நரகத்தில் வாசமென்று அறியோமா? 44

அந்தோ! அரசவின்பத்தை விழைந்து சுற்றத்தாரைக் கொல்ல முற்படும் நாம் பெரிய பாவம் செய்யத் தலைப்பட்டோம். 45

கையிலாயுதமில்லாமல், எதிர்க்காமல் நிற்குமென்னை இந்த திருதராஷ்டிரக் கூட்டத்தார் ஆயுதபாணிகளாய் போரில் மடித்துவிடினும், அது எனக்கு பெரிய நன்மையேயாம். ” 46

**சஞ்சயன் சொல்லுகிறான் :-**

செருக்களத்தில் இவ்வாறு சொல்லிவிட்டுப் பார்த்தன் அம்புகளையும், வில்லையும் போட்டுத் துயரில் மூழ்கிய மனத்தனாய்த் தேர்ப் பீடத்தின் மேலுட்கார்ந்துகொண்டான் .. 47

**( ‘அர்ஜுன விஷாத யோகம்’ என்ற முதல் அத்தியாயம் இத்துடன் முற்றுகிறது.**

**இனி ‘ஸாங்கிய யோகம்’ ஆரம்பம் .. )**





“பார்த்தா,
பேடித்தன்மையடையாதே! இது
நினக்குப் பொருந்தாது.
இழிபட்ட மனத்தளர்ச்சியை
நீக்கி, எழுந்து நில் ..
பகைவரைச் சுடுவோனே!”

**போ**ர்புரிய மனம் வராமல் திகைத்துத் தன்னைச் சரணடைந்த அர்ஜுனனை நோக்கி கண்ணன் உரைக்கின்றான் :-

“அர்ஜுனா, நீ வருந்துவது முற்றிலும் தவறு. எதிரிகளின் ஆன்மாவைப்பற்றி வருந்துகிறாயா?, அல்லது அவர்களின் உடலைப்பற்றி வருந்துகிறாயா? இரண்டும் சரியல்ல. ஆன்மா என்றும் அழிவற்றது. இதைக் கத்தியால் வெட்டவும், தீயினால் எரிக்கவும் முடியாது. உடலோ அழியும் இயல்பு வாய்ந்தது. நீ அழிக்காவிடினும், அது தானே அழியவேண்டியதுதான். ஆன்மாவுக்கு ஓருடல் அழிந்ததும், மற்றோருடல் தானே வந்த சேரும். ஆத்மாவின் இயற்கையை எண்ணி உனக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள செயல்களை செய்தே தீரவேண்டும். அச்செயல்களைச் செய்யுங்கால், நாம் செய்யவேண்டியதையே செய்கிறோம். அதுவும் ஈசுவரப் பிரீதிக்காகவே எண்றெண்ணிச் செய். இதனால் ஆத்மஞானம் பெருகி, அதில் நிலை பெற்று நற்கதியடைவாய். ஈசுவரப் பிரீதியைத் தவிர மற்ற பலனைக் கோரினால் சம்சாரக் கட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது.” ..






# பீஷ்மர் ..!




**ஒருநாள் யமுனை ஆற்றங்கரையில் உலா வினான் சந்தனு மன்னன். ஏகாந்த நிலை யில் தன்னை மறந்திருந்த அவனை ஒரு திவ்விய நறுமணம் கவர்ந்தது.**

**அது ஒரு வீர மகாபுருஷனின் காவியத்திற்கு வித்திட்டது ..**

நறுமணம் வருகின்ற திசையைத் தேடிச் சென்ற சந்தனு மன்னன் அங்கே ஒரு செம்படவப் பெண்ணைக் கண்டான். விண்ணகமும் மெச்சும் பேரழிகியாக நின்றிருந்த அவளிடமிருந்துதான் இந்த அபூர்வ நறுமணம் புறப்பட்டு வருவதை உணர்ந்தான். இன்ப அதிர்ச்சியுடன் நெருங்கினான் வேந்தன் ..

''பெண்ணே, யார் நீ .. உன் பெற்றோர் யாவர், இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய் ? ..''

உயிர் பெற்றெழுந்த சிற்பமாக பதிலுரைத்தாள் அம் மீனவ நங்கை ..

''அரசே, நானொரு செம்படவப் பெண். என் தந்தை இங்குள்ள மீனவர்களின் தலைவர். தர்ம நெறியறிந்த அவரின் கட்டளையை ஏற்று, இந்த நதியில் ஓடம் செலுத்தும் பணியை செய்து வருகிறேன்.''

தெய்வீக வடிவழகோடு மிளிர்ந்த அவளிடம் அக்கணமே மனதைப் பறிகொடுத்து விட்டான் மாமன்னன். தாமதிக்காமல் அந் நங்கையின் இருப்பிடம் நாடிச்சென்று அவளின் தந்தையை சந்தித்தான்.

'' **உங்கள் மகளை மணக்க விரும்புகிறேன், சம்மதம் தருக** '' என்றான்.

திடுக்கிட்டான் செம்படவத் தலைவன். அகிலம் புகழும் அஸ்தினாபுரத்தின் சக்கரவர்த்தியா பெண் கேட்கிறார்!

**மீனவனின் நிபந்தனை ..**

'' அரசே, பெண்ணாகப் பிறந்த மகள் ஒருவருக்கு மணம் செய்து வைப்பது தந்தையான எனது கடமைதான். ஆனால் அரசர்க்கெல்லாம் அரசராக விளங்கும் தாங்களா எனக்கு மருகனாக வருவது என்றுதான் திகைக்கிறேன். எனினும், இதுவே தங்கள் விருப்பமெனில், தர்மம் தவறாத நீங்கள் ஒரு நிபந்தனைக்கு உடன்படில் நானும் இணங்குகிறேன் ..'' என்றார்.

செம்படவத் தலைவனின் மனதில் ஏதோ நோக்கம் இருப்பதை உணர்ந்துகொண்ட சந்தனு மன்னன், அதை நிறைவேற்ற விரும்பினார்.

''செம்படவனே, உன் மகளின் மீதுள்ள காதலால் உன் விருப்பத்தை நிறைவேற்றித் தருவேன். ஆயினும், அது நீதிக்கும், நியாயத்திற்கும் புறம்பானதாக இருப்பின் ஒருகாலும் உடன்படேன். உன் விருப்பத்தைச் சொல்வாயாக ..''

அரசரின் அனுமதி கிடைத்ததும் மீனவத் தலைவன் தயக்கம் களைந்து கூறலானான் ..

''அரசே, இவளின் வயிற்றில் பிறக்கும் மைந்தனுக்கே நீர் இளவரசுப் பட்டம் கட்டவேண்டும். உமக்குப்பிறகு நாட்டை ஆளும் உரிமை அவனுக்கே கிடைக்கவேண்டும். இதுவே என் நிபந்தனை.''

அந்தப் பெண்மீது தீராத மோகம் கொண்டிருந்த சந்தனு இதற்கு உடன்படுவான் என்று யாவருமே எதிர்பார்ப்பர்.




## விண்ணும், மண்ணும் அதிர மாபெரும் சபதம்!

ஆனால், அப்படி நடக்கவில்லை. இந்த நிபந்தனையால் நிலைகுலைந்து போனாலும், உடன்படவில்லை சந்தனு. தன் காதலை அவ்விடத்திலேயே துறந்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

ஈரேழு உலகத்தையும் அந்தப் பேரழகியின் காதலுக்கு காணிக்கையாக்கத் தயங்காத மன்னன் இளவரசுப்பட்டத்தை மட்டும் தர மறுத்ததேன்? அதற்குக் காரணம் உண்டு ..

அவனுக்கு ஒரு மைந்தன் இருக்கிறான். அவனிடம் உயிரையே வைத்திருக்கிறான் சந்தனு. அவன் சாதாரான மகனல்ல. கங்காதேவியின் புதல்வன்! காலத்தால் வெல்லமுடியாத தர்மத்தின் தலைமகன்! மகா பாரத காவியத்தின் வீரமிக்க மூத்த நாயகன்!!

இப்படியானவனை ஒதுக்கிவிட்டு வேரொரு வனுக்கு பட்டம் சூட்ட மனம் வருமா மன்னனுக்கு?

### தெய்வீக மகன்

அந்த தவப்புதல்வனின் பெயர் தேவவிரதன். (பீஷ்மர் என்றும், கங்கா புத்திரன் என்றும் அழைக்கப்பட்டவரே இவர்)

தன் தந்தையின் மகிழ்ச்சி சில நாட்களாக மங்கி வருவதை கவனித்தான் தேவவிரதன். காரணம் புரியாது கலக்கமுற்றான். தன்னில்மேல் கொண்ட அன்பினால் தனது காதலையே தந்தை துறந்து விட்டதையும், அப்பெண்ணை மறக்கமுடியாமல் தவிப்பதையும் எங்கனம் அறிவான்!

ஒருநாள் மன்னனை அணுகினான் தேவவிரதன்.

‘‘தந்தையே, தங்களுக்கு இப்பூவுலகில் எந்தக்குறையும் இல்லை. மக்களும், வேந்தர்களும் தங்கள் கட்டளைக்கு கட்டுப்பட்டவர்களே! தங்களின் எந்த விருப்பத்தையும் நிறைவேற்றவல்லவனாக நான் இருக்கிறேன். எதற்காக தங்களின் உள்ளம் வாட்டத்திற்கு இலக்கானது? தயை கூர்ந்து கூறும் ..’’ என்று வேண்டினான்.

தெய்வீகம் பொழியும் தனயனின் முகத்தை ஏறெடுத்தான் சந்தனு. அளவற்ற பாசமும், மதிப்பும் பொங்க பதிலுரைத்தான் ..

‘‘மகனே! நீ கூறியது உண்மையே. எக்குறையும் எனக்கில்லைதான். பெரும் சாம்ராஜ்யமான இந்த அஸ்தினாபுரத்திற்கு பெருமளவில் வாரிசுகள் தேவை. ஆனால், தனியொருவனான நீ நூறு புதல்வர்களுக்குச் சமமானவன் என்றறிவேன். இருப்பினும், தலைமுறையை தக்கவைக்க பிள்ளைகளின் எண்ணிக்கையே தர்மம் என சாஸ்திர விற்பன்னர்கள் கூறுவர். அக்னி ஹோத்ரம் செய்வது, மூன்று வேதங்களையும் ஓதுவது, நிரம்பிய தட்ஷணைகளுடனான வேள்விகளைச் செய்வது யாவும் மகப்பேற்றின் பதினாறில் ஒரு பங்குக்கு ஈடாகாது. இதுவும் என் வாட்டத்தின் அடையாளமாக இருக்கலாம்’’ .

இந்த வார்த்தைகளிலிருந்து தந்தையின் மனக்கிடக்கையை உணர்ந்துகொண்டான் தேவவிரதன். தந்தையின் நாட்டம் ஒரு நங்கையிடம் சார்ந்திருப்பது அவனுக்குப் புரிந்தது. அறிஞனல்லவா!



அது யார் என்பதை அறிய விரும்பி, அரசனின் தேர்ப்பாகனை வரவழைத்து விசாரித்தான். நடந்ததை தெரிந்த அளவுக்கு விவரித்தான் சாரதி.

''இளவரசே, தங்களின் அனுமானம் சரியே! ஒரு செம்படவப் பெண்மீது அரசர் காதல் வயப்பட்டுள்ளார். மணமுடித்துத்தர அவளின் தந்தை விடுத்த நிபந்தனையை ஏற்க மறுத்துத் திரும்பிவிட்டார் ..''

என்று தொடர்ந்த தேர்ப்பாகன் நடந்தது அனைத்தையும் இளவரசருக்கு எடுத்து ரைத்தான். சகலத்தையும் அறிந்துகொண்ட தேவவிரதன், தந்தையின் பாசத்தை எண்ணிப் பெருமையடைந்தான். அறமறிந்த சிலரோடு ஆற்றங்கரைக்குச் சென்றான்.

## மகனின் தியாகம் ..

மரியாதை செய்து வரவேற்று அமர்த்திய செம்படவத் தலைவனிடம் தன் தந்தைக்குப் பெண் தருமாறு கேட்டான்.

அரசனிடம் கூறிய அதே நிபந்தனையை எடுத்துரைத்தான் தலைவன். ''ஒரு ராஜ்யத்தையே பரிசாகப்பெற என் மகள் சத்தியவதி தகுதியானவள். அவளின் மகனுக்கே அரசுரிமை கிடைக்கவேண்டும். உம் தந்தையோ உமக்கே இளவரசுப்பட்டம் கட்டியிருக்கிறார். நீரோ உலகில் மிகச்சிறந்த வில்லாளி ஆவீர். உம்மை வெல்வது யாருக்கும் இயலாது. இதுவே திருமணத்திற்குக் குறுக்கே இருப்பதாகும்.''

## உலகமே கண்டிராது ..

இதனை செவிமடுத்த தேவவிரதன் கூறிய முடிவு வையகத்தையே அசத்தியது. மாபெரும் அதிர்ச்சியை அளித்தது ..

''கேளுங்கள் செம்படவத் தலைவரே, நான் கூறும் இவ்வார்த்தைகளை முன்னும், பின்னும் இவ்வுலகம் கண்டிருக்காது. இப் பூமண்டலத்தின்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். உமது மகளின் புதல்வனே அஸ்தினாபுரத்தின் அரசனாக இருப்பான் என்று வாக்குத் தருகிறேன் ..'' என்றதும் யாவரும் திடுக்கிட்டனர்.

நெகிழ்ந்துபோன தலைவன் கட்டுக்கடங்காத உணர்ச்சியோடு மேலும் கூறினான் ..

''பரதகுல திலகமே! உம்போன்ற தர்ம சீலரை இந்த யுகம் காண்பதரிது. கங்காபுத்திரராகிய நீர் சொன்ன வாக்கை நிச்சயம் நிறைவேற்றுவீர். ஆயினும் ,..''

தனது வாக்கு சத்தியவதியின் தந்தையை முழுமையாக திருப்திப்படுத்த வில்லையென்றுணர்ந்த தேவவிரதன் ..

''செம்படவத் தலைவரே, மேலும் என்ன? ..'' என்று நோக்கியபோது ..

''இளவரசே, நீர் கொடுத்த வாக்கில் எள்ளளவும் எமக்கு ஐயமில்லை. ஆயினும் பெண்ணைப் பெற்றவர்கள் என்ற முறையில் நாம் விழிப்போடு இருப்பதே நீதி. வில்லாளிகளிலே யாருமே மிஞ்சமுடியாத பெரும் வீரர் நீர். உமது புதல்வர்களும் நாளை அவ்வாறே சிறந்து விளங்குவர். உமக்குப்பிறகு உமது மைந்தன் அரசுரிமையை பறிக்க முயன்றால் நாம் என்ன செய்வது? இப்படி ஆவதற்கு சாத்தியம் இருக்கிறதல்லவா? ..'' என்றான் தலைவன்.

இதனை செவிமடுத்த தேவவிரதன் செம்படவத் தலைவனின் தயக்கத்தின் பொருளை உணர்ந்தான். அதிலிருந்த உண்மையையும் புரிந்தான். தந்தையின் மகிழ்ச்சியின் பொருட்டுச் செய்த தியாகத்தின் அளவு போதாமலும், தர்மத்தின் நெறி காக்க மேலும் தியாகம் தேவைப்படுவதையும் கண்டான். **சற்றும் தயங்காமல் ஒரு சபதத்தை செய்தான்.**

அதனை அவன் கூறியபோது விண்ணும், மண்ணும் திகைத்து ஒருகணம் தடுமாறின. முக்காலமும் மனிதகுலம் கண்டிராத கடமைவீரனைப் பார்த்து மூவுலகும் பெருமையால் பூச்சொரிந்தது.

### பயங்கர சபதம் ..

'' செம்படவர் தலைவரே! கவலை வேண்டாம். என் வாக்கைக் காப்பாற்றுவதும், தந்தையின் நலத்தை நிறைவேற்றுவதும் என் விழிகளுக்கொப்பான கடமையாகும். அதிலிருந்து ஒருபோதும் தவறேன். இந்த பிரபஞ்சத்தின்மீது சத்தியம் செய்து ஒரு சபதத்தை செய்கிறேன். ரிஷிகளும், தேவர்களும், பூதங்களும் இந்த உறுதிமொழியைக் கேட்கக்கடவர். இதோ கேளும், **இக்கணம் முதலாக நான் பிரமச்சரியம் பூணுகிறேன்.** என் உயிர் உள்ளவரை எந்தப்பெண்ணையும் தீண்டாமல் என் வாழ்நாளைக் கழிப்பேன். இதில் நம்பிக்கை வைத்து, என் தந்தைக்கு உமது மகளை மணமுடித்துக்கொடும் ..'

இந்த உறுதிமொழியால் புளாங்கித மடைந்து தன் மகள் சத்தியவதியை தருவதற்கு ஒப்புக்கொண்டான் மீனவத் தலைவன்.

நிகரற்ற இவ்வரிய சபதமும், அரச விசுவாசமும் தேவவிரதனை மூவுலகும் அறியும்படி செய்தன. தேவர்கள் மலர்மாரி பொழிய, கங்காதேவியும் தன் புதல்வனால் பெருமையடைந்தாள். விண்ணெங்கும் **''பீஷ்மா!, பீஷ்மா! ..''** என்று ஒலித்தன. அன்றுமுதல் தெய்வீக இளவரசனான தேவவிரதன், உலகத்தையே ஈர்க்கப்போகின்ற மாபெரும் காவியத்தின் முதலாவது பெரும் நாயகனாக, **'பீஷ்மர்'** என்ற பெயரில் அடி வைத்தார்.

தர்மமும், நெறிகளும் தவறாமல் தனது வாழ்நாளை அரச சேவைக்கென்றே அர்ப்பணித்தார். தனது தியாகத்தால் உருவான புதிய ராஜ வம்சத்திற்கு எந்த இன்னலும் வராவண்ணம் இரவு பகலாக பாதுகாப்பளித்தார். அஸ்தினாபுரத்தின் ராஜ்யத்தை தனது ஒப்பற்ற விற்போரினால் புவியெங்கும் விஸ்தரித்தார். பூரண பிரம்மச்சரிய விரதனாக அவர் கட்டியெழுப்பிய மகாபாரதத்தில் 'பிதாமகர்' என்று பணிந்து போற்றப்பட்டார்.



#### நிகரற்ற வீர வரலாறு ..

இளைய தாயின் மகனான விசித்திர வீரியனுக்கு முடிசூட்டி, அவனது ராஜ்யத்தை தனது வீரத்தால் காத்துவந்த பீஷ்மர் எத்தனையோ போர்க்களங்களைச் சந்தித்தார். அண்டங்கள் நடுநடுங்கும் வண்ணம் அவரது வில் பேசிய வீரக் கதைகளுக்கு முடிவே இல்லை. குருஷேத்திரப் போர்க்களம்வரை முதுமையிலும் போராடிய பீஷ்மரின் யுத்த வரலாற்றை எழுதுவதானால், அதுவே தனிப் புத்தகமாகிவிடும்.

காசி ராஜனின் புதல்விகள் மூவரின் பேரழகு கேள்விப்பட்டு, பல தேசத்து ராஜகுமாரர்களும் சுயம்வரத்திற்கு வந்திருந்த நிலையில் விசித்திர வீரியனும் அவர்களை மணமுடிக்க விரும்பியதை அறிந்தார் பீஷ்மர். அவர்களை கொண்டுவருவதற்காக தேர் கொண்டு சுயம்வர மண்டபத்திற்குச் சென்ற பீஷ்மரை எல்லோரும் பரிகசித்தனர். **''சுயம்வரத்தில் இந்த பிரம்மச்சரிய கிழவருக்கு என்ன வேலை ..? எல்லாம் பொய் நடிப்போ! ''** என்றவர்களின் சொற்களை ஒதுக்கிவிட்டு நேராக அரசரை நோக்கி, '' என் தம்பி இவர்களை விரும்புவதால் மூவரையும் இப்போது அழைத்துச்செல்லப் போகிறேன். .. தைரியமுள்ளவர்கள் என்னை எதிர்த்து வென்று, இவர்களை மீட்டுக்கொள்ளட்டும்'' என்றுவிட்டு மூவரையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார். பின் தொடர்ந்து வழிமறித்த எல்லா நாட்டு அரசர்களையும் தன்னந்தனியாக மண் கவ்வச்செய்த அந்த யுத்தக்காட்சி மிகச் சிறப்பானது.

அர்ஜுனன், துருபதன், சாலுவன், வருணன் முதலிய பெரும் வீரர்களோடு சமர்புரிந்த பீஷ்மரின் ஆற்றல் சொல்லற்கறியது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்த சமர், பரசு ராமரோடு ஏற்பட்ட மோதல்தான். சம அளவில் பலமும், ஞானமும், தேர்ச்சியும் கொண்ட இவரகளின் கடும் சமர் முடிவற்று இருந்ததால் தானாகவே பரசுராமர் விலகிக்கொண்டார். மிக அற்புதமானதொரு பலப்பரீட்சை அதுவாகும்.

#### வீர மைந்தனின் முடிவு ..

பாரதக் கதையின் பல தலைமுறைகளையும் தாண்டி நீண்டுகொண்டே சென்ற பிதாமகராகிய பீஷ்மரின் கதை மிக உருக்கமானது. வீரம், கடமை, தர்மநெறி, ராஜசேவை, தியாகம் முதலிய எல்லாம் இருந்தும் ஒன்று மட்டும் இவரின் வாழ்வில் இருக்கவே இல்லை. அதுதான் மகிழ்ச்சி. எப்போதும் அரசையும், அநீதிகளையும் எண்ணி கவலைப்படுகின்ற, துயரத்தை சுமப்பவராயிருந்தார். வேதனை தாங்கொணா நேரங்களில் நதிக்கரைக்குச்சென்று தனது தாயாகிய கங்காதேவியிடம் உரையாடி ஆறுதல் பெறும் சம்பவங்கள் உருக வைக்கும்.

இப்படிப்பட்ட பெரும் வீரத்தளபதியை ஒரு பெண்தான் கொன்று பலி வாங்கினாள் என்றால், நம்புவீர்களா?





வாசிப்பு இன்பம் பெருக்கும்

# சுந்தரகாண்டம்

இதனை வீட்டில் விஷேசமாக படித்து, பாரணை செய்து நினைத்த காரியத்தை ஈடேற்றிக்கொள்கின்ற குடும்பங்கள் நிறைய இருக்கின்றன. தினமும் அல்லது வெள்ளி, வியாழன் போன்ற நாட்களில் பூஜையறையில் ஒரு சிறு துணியோ அல்லது பலகையோ இட்டு இக்காண்டத்தைப் படித்தால் நிச்சயம் அப்பலகையின் மீது வந்து அமரும் ஆஞ்சநேயர் நம் துன்பங்களை (கடன், திருமணம், புத்திரபாக்கியம், தொழில், பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் காணப்படும்) நீங்கி சகல ஐஸ்வர்யங்களுடனும் வாழ வைப்பார் என்பது சத்திய உண்மையாகும். நீங்களும் இதைப் படித்து உங்கள் இல்லங்களிலும் சகல ஐஸ்வர்யங்களையும் பெருக்கிக் கொள்ள ஸ்ரீ ஆஞ்சநேயன் சுவாமிகளை பிரார்த்திக்கின்றோம்....

**ரா**மாயணத்தின் இதயப்பகுதியான இந்த சுந்தரகாண்டத்தை ரசிக்காதவர் இலக்கிய உலகிலே யாருமே இருக்க முடியாது. அதில் வருகின்ற ஒவ்வொரு காட்சியும் சிந்தையை கொள்ளை கொள்ளும், பரவசத்தில் மனம் துள்ளும்!

ஏனைய காண்டங்களில் தென்படுகின்ற சூழ்நிலைக்கு மாறாக மலையும், கடலும், ஆகாயமும் இந்த காண்டத்தில் தத்ரூபமாக அமைந்து, அற்புதமாக காவியத்தை நடத்திச் செல்லும்.

வாழ்வில் வளம் தரவல்ல பல நன்மைகளை அருள்வது சுந்தரகாண்டம். ஸ்ரீராம பக்தன் ஆஞ்சநேயன் அறிமுகமாகின்ற இந்த காண்டத்தில்தான் ராமாயண காவியம் விறுவிருப்பை அடைகிறது.

ஸ்ரீராமனின் நினைவை எப்போதும் ஊட்டுகின்ற அனுமன் நாயகனாகத் திகழும் காண்டம் இது.

'ஸ்ரீராம ஜெயம்' சொல்லும்போதோ, ராம பூஜை நடத்துமபோதோ அருகில் ஒரு பலகையை வைத்து அதன்மேல் தூய விரிப்பொன்ற போடவேண்டும். ஏனெனில், ராமநாமம் சொல்லப்படுகின்ற அந்த இடத்தில் அனுமன் வந்து அமர்வார்.

சுந்தரம் என்றால் அழகு என்று பொருள். அழகான காட்சிகளையும், சம்பவங்களையும் அள்ளிதருவதால் இந்த காண்டத்திற்கு சுந்தரகாண்டம் என்று பெயர் வைத்திருக்கலாம்.

ஆரண்ய காண்டத்திலிருந்து ராமர், தன் தம்பியுடன் மலைப்பிரதேசமாகிய கிஷ்கிந்தாவில் கால் வைக்கும்போது, அவரின் சோகத்தை மறந்துவிட்டு காட்சியின் வனப்பில் நம் மனம் லயித்துவிடுகிறது.

அனுமனின் அறிமுகம், சுக்ரீவ நட்பு, வாலி வதம், கடல் தாண்டும் சம்பவம், சீதையின் துயரம், யுத்த ஆரம்பம் என்ற யாவுமே காவியத்தின் முக்கிய பகுதிகள். வால்மீகியும், கம்பரும் இக் கட்டங்களை வனப்புமிக்க நடையில் தந்துசென்றிருக்காவிட்டால், இந்த அறிய காவியம் நமக்குக்கிடைத்திருக்குமா?

அதிலும் சுகத்தை அள்ளித் தருகின்ற சுந்தரகாண்டத்தை தந்ததற்கு மனித குலமே கடமைப்பட்டிருக்கிறது.

அனுமன் வீரம்கொண்டு ஆகாயத்தில் பாய்ந்து, கடல் தாண்டும் காட்சிக்கென்றே பலநூறு தடவைகள் சுந்தரகாண்டத்தை படிப்பவர்கள் இருக்கிறார்கள். இதனை வீட்டில் விஷேசமாக படித்து, பாரணை செய்து நினைத்த காரியத்தை ஈடேற்றிக்கொள்கின்ற குடும்பங்கள் நிறைய இருக்கின்றன.

இதனை பூஜிக்கும்போது அஷ்ட ஐஸ்வர்யங்கள் குறைவில்லாமல் கிடைக்கிறது. பாராயணம் செய்வதற்கான 15 முறைகள் வாயு புராணத்தில் இருக்கிறதாம். இது உமாஸம்ஹிதையில் சிவபெருமானால் பார்வதி தேவிக்குச் சொல்லப் பட்டிருக்கிறது. இது மொத்தம் 68 சாகங்களைக் கொண்டதாக இருக்கிறதாம்.

சுந்தரமான காட்சிகளையும், சுந்தரமான சம்பவங்களையும் தந்து மகிழ்விப்பதால் இந்தப் பெயர் கொண்டிருப்பதாக சான்றோர்கள் கூறுவர். பக்தி ரசம் சொட்டும் எத்தனையோ சம்பவங்கள் சுந்தர காண்டத்தின் சிறப்புக்குக் காரமாக இருந்திருக்கின்றன.

கைலாயத்தில் சிவபெருமான் உமையிடம், ''தேவி, ஸ்ரீமன் நாராயணன் ராமாவதாரம் எடுக்கப்போகிறார். இதில் அகிலம் ஆனந்தமாய் இருக்கிறது. பறவைகளும், விலங்குகளும், பிராணி களும்கூட அவருக்கு சேவை புரிய ஆயத்தமாகி விட்டன. நம்மாலானதையும் செய்யவேண்டுமல்லவா? விலங்கினங்களுள் வானரங்களும் முக்கியமல்லவா, ஆதலால் வானரப்பிள்ளை ஒன்றைப் பெற்றுத்தருவாயா? ..'' என்று கேட்டார்.

ஆனால் பார்வதியின் மறுப்பும், பின்னர் தானே ருத்ர சக்தியாய் அனுமனை உருவாக்கியதும், இச்சம்பவங்களை உள்ளடக்கிய புராணத் தகவல்களும் அற்புதமோ, அற்புதம்! வாசித்தாலன்றி அதன் சுவையறிவது கடினம்.

பல விதமான த்தத்துவங்களால் நம் வாழ்க்கையை சீரமைக்கிறது சுந்தரகாண்டம். பெண் என்பவள், அதிலும் திருமணமானவள் மாற்றானிடம் சிக்கியிருக்கின்றாள் என்றால் அவளின் மன நிலை எந்த அளவுக்கு பாதிப்படைந்திருக்கும்! அவளின் கண்ணீர் அந்த இலங்கையைச் சூழ்ந்திருக்கும் கடலையும் விடப்பொரிதாகி விடுமே! **'தன்னைக் காப்பாற்ற யாருளர்'** என்ற ஏக்கத்தில் உயிரைவிடத் துணிந்தபோது சட்டென்று ஆஞ்சநேயன் முன்னால் வந்து குதித்தானே! என்ன ஒரு இன்ப அதிர்ச்சி!

லோக நாயகனாகிய நாராயணன் எல்லாம் அறிந்திருந்தும் அறியாத மனிதனாக அழுதும், அலைக்கழிந்தும், தடுமாறியும் தவித்தானே! எப்படியான தத்ரூப மானிட தர்மம்!



வால்மீகி மகரிஷி எழுதிய ராமாயணத்தின் 24 ஆயிரம் ஸ்லோகங்களில், ஆயிரத்துக்கு ஒரு எழுத்து வீதம் தேர்ந்தெடுத்து **'காயத்திரி மந்திரம்'** உருவாக்கப் பட்டதாம் ..

கலியுக தெய்வம் அனுமனும் கற்றுத் தருவது கொஞ்சமா? சேவையின் தெய்வமன்றோ அது! ஆஞ்சநேயர் தனக்காகவோ தனது அம்மா அஞ்சனாவுக்காகவோ, அல்லது தன் தந்தை வாயுவுக்காகவோ, அரசன் சுக்ரீவனுக்காகவோ சீதாப்பிராட்டியாரைத் தேடிக்கொண்டு போகவில்லை. 'யாரோ, ராமன் என்றொரு அரசகுமாரன் அயோத்தி தேசத்திலிருந்து தனது மனைவியைத் தேடிக்கொண்டு வந்தானாம், தனது அரசரிடம் உதவி கேட்டானாம்' என்பதால், அவனுக்காகக் கடலைத்தாண்ட வேண்டுமென்பது கட்டாயமா என்ன!

அஞ்சனை மைந்தனின் கேள்வி அதுவல்லவே!.

மற்றவர்க்கு தரும் சேவையில் மகிழும் புனிதனன்றோ?

**'பிறர்க்கு ஒரு துன்பமெனில், ஆபத்தைக் கண்டு கலங்காதே! துணிச்சலோடு உதவி புரி! அதில் உயிர் போயினும் சிறப்பே ..'** என்றல்லவா நமக்குக் கற்றுத்தருகிறார்!

**சுந்தரகாண்டம் கற்றுத்தருவது இது மட்டுமா?**

கடலைக் கடந்து இலங்கையில் குதித்த வீர அனுமன் லங்காபுரியின் அத்தனை இடங்களையும் நன்கு நோட்டமிட்டார். அப்போது அரண்மனைக்குள் நுழைந்து இராவணனின் பள்ளியறையை அடைந்தார். அங்கே தனது அந்தப்புர நாயகிகளுடன் அலங்கோலமான நிலையில் துயில்கொள்ளும் இராவணனைக் கண்டார்.

**'இப்படியான காட்சிகளைக் காண்பதற்கு என்ன பாவம் செய்தேனோ'** என்று அவர் வருந்திய வரிகள் அவரது தூய்மையான வாழ்க்கையையும், சேவையின்போது காட்டவேண்டிய சகிப்புத் தன்மையையும் காட்டுகிறதல்லவா? இதைவிட இன்னொரு அற்புதம் என்னவெனில், அந்தப்புரத்தின் மற்றோர் பகுதியில் மண்டோதரி நித்திரை செய்வதைப் பார்த்துவிட்டு, **'இவர்தான் சீதையோ ..'** என்று சந்தேகமும் கொண்டாராம்.

மாசற்ற மணிவிளக்கானவள் மண்டோதரி என்பதையும், எதிரியாக இருப்பினும் குண மேன்மைகள் போற்றப்பட வேண்டியவை என்பதும் சுந்தரகாண்டம் கற்றுத் தருகிறது.

ராமபிரானையும், சீதா தேவியையும் ஒன்று சேர்க்க மாருதி ஏற்றுக் கொண்ட பெரும் முயற்சிகளுக்கு உலகத்தில் எதுவுமே ஈடாகாது.

பிரிந்திருக்கும் கணவனையும், மனைவியையும் சேர்தது வைத்தல் அப்படியோர் புண்ணியச்செயலாம்! அதிலும், நித்திய பிரம்மச்சரிய விரதனாகிய வாயுபுத்திரன் இப்பணியை புரிந்தானென்றால் இதைவிட உபதேசம் வேண்டுமா நமக்கு?



# கற்றுத் தருகின்ற கடைசிப் பக்கம்!



ஒரு ஊரில் ஒரு பிரபு இருந்தார்.

வழக்கம்போல ஒருநாள் வெளியே உலா விவிட்டு வீடு திரும்பும் போது, ஒரு வறுமையான தொழிலாளியை வழியில் பார்த்தார்.

சரியான உணவு அவனுக்குக் கிடைப்ப தில்லை என்பது எலும்பும், தோலுமாக இருந்த அவ னின் உடம்பில் தெரிந்தது. ஆனால், என்ன ஆச்சரி யம்! அவனது முகத்தில் பசிக்களையோ, சோர்வோ சிறிதும் தெரியவில்லை. சொல்லப் போனால் மகிழ்ச்சியாக இருந்தான்.

நெருங்கி விசாரித்தார். '' தம்பி, இப்போது மதியமாகிறது. நீ சாப்பிடவில்லையா? ''

''இல்லை. இப்போது வேலைக்குப் போக ஆயத்தமாகிறேன். சாப்பாடு அதன்பிறகே ..''

''வேலை கிடைக்காவிட்டால் ..? ''

'' ஏன் கிடைக்காது! கட்டாயம் தேடிக் கொள்வேன் ..''

அவனது நம்பிக்கையும், திருப்தியும் அவரை எதுவோ செய்தன. தன்னிடமில்லாத ஒன்று அவனிடம் இருப்பதாக உணர்ந்தார்.



அதை அறிந்து கொள்ள விரும்பி, ஒரு திட்டம் வகுத்தார்.

''தம்பி, இன்று எனது வீட்டுக்கு சாப்பிட வாயேன். இது எனது விருப்பம்.'' என்றார். அந்த ஏழையும் தட்ட மனமின்றி சம்மதித்துச் சென்றான்.

''முதலில் கை கழுவுவோம், வா'' என்று யாரோ தண்ணீர் ஊற்றுவதாக பாவனை செய்துகொண்டு தனது கையைக் கழுவினார்.

ஏழை அதைப்பார்த்து விட்டு தானும் அது போலவே செய்தான்.

சாப்பிட அமர்ந்ததும் யாரோ உணவு போடுவதாக பாவனை செய்து கொண்டு பிரபு சாப்பிட லானார். தொழிலாளியும் அது போலவே சாப்பிட்டான். இடைக்கி டையே பிரபு ''பார்த்தாயா .. வடை யும், பொரியலும் எவ்வளவு பிர மாதம்! அடடா, இன்னும் கொஞ்சம் குழம்பு விடேன்! '' என்றார்.

ஏழையும் சளைக்கவில்லை. '' பாயாசம் யார் செய்தது? பிரமாதம் ஐயா! ''
என்று ருசியாகவே சாப்பிடுவதாக நடித்து முடித்தான்.

எல்லாம் முடிந்ததும் ஏழை ''ஐயா, மிக்க நன்றி. இப்படி ருசியாக நான் சாப்பிட்டதே இல்லை! '' என்று கூறியவாறு புறப்பட ஆயத்தமானான். பிரபுவுக்கு வியப்போ தாங்க முடியவில்லை. ஏனெனில் அந்த ஏழையின் முகத்தில் உண்மையிலேயே சாப்பிட்டதுபோல அப்படியொரு திருப்தி!

பிரபு கூறினார் ..''தம்பி, என்னை மன்னித்து விடப்பா. உன் திருப்தியின் அளவை சோதிக்கத்தான் இப்படி நடித்தேன். பரம திருப்தியோடு எந்த நிலையிலும் வாழ முடிந்தவன் நீ! எந்த ஞானிக்கும்கூட கிட்டாத பேறு இது ..'' என்று தழுதழுத்த குரலில் கூறிவிட்டு, வேலைக்காரர்களை அழைத்தார். உண்மையிலேயே அறுசுவையோடு விருந்து தந்து உண்ண வைத்தார்.

''தினமும் வருகிறாயா? ..'' என்று அன்போடு அவர் கேட்டபோது,

''தினமுமா? வேண்டாம் ஐயா, இப்படி உண்ணப்பழகிவிட்டால், பிறகு வாழும்வரையும் இதைத்தேடி இங்கே வரவேண்டியிருக்கும். மன்னியுங்கள்'' என்றுவிட்டுப் புறப்பட்டான் ஏழை.

தன்னிடமில்லாத ஒன்றை இப்போது பிரபு கண்டுபிடித்து விட்டார்.

அது ..

**திருப்திதான்.**

# சீதையை அனுமன் கண்டுகொண்டதெப்படி?

இலங்கையில் சீதையைக் கண்டுவிட்டுத் திரும்பிவந்த ஆஞ்சநேயர் ஸ்ரீராமரிடம்,
" கண்டனன் கற்பினுக் கனியைக் கண்களால் "
என்று தெரிவித்தாராம். இது கம்பரின் பாடலாகும்.
"கண்களால் கண்டனன்" என்று அனுமன் கூறுவதில் என்ன புதுமை இருக்கிறது, யாருமே கண்களால்தானே காண்பார்கள் !

இந்தக் கேள்விக்கு விளக்கம் இவ்வாறு வருகிறது ..

சீதையை அனுமன் முன்பின் பார்த்ததில்லை. அவள் எப்படியிருப்பாள் என்றும் அவருக்குத் தெரியாது.. அதனால் தேடிப்புறப்படும் முன்பே அவர் ராமரின் கண்களை நன்றாகப் பார்த்து வைத்துக்கொண்டாராம். "ராமரின் கண்களில் இருக்கும் அளவுக்கு சோகம் எந்தப் பெண்ணின் கண்களில் இருக்கிறதோ அவரே சீதையாக இருக்கவேண்டும் .." என்று தீர்மானித்துக் கொண்டாராம். அவ்வாறே, அசோக வனத்தில் சீதையின் கண்களைப் பார்த்து அறிந்தார்.

இதையே "கண்களால் கண்டனன் .."
என்று கம்பர் பாடினார் ..

## அடுத்த இதழில்...

குருப்பார்வையில் ராசிப்பலன்கள் ..

நாயன்மார்களின் தொடர் ..

புராணங்களில் அரிய தகவல்கள் ..

மாணவருக்கான தகவல்கள் ..

ஆன்மீக சிறப்புகள் ..

